ரிஜிஸ்டர் நெ. 2011

தனிப் பிரதிவிலை | வெளி நாடு 0-1-6 | உள் நாடு 0-1.0

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன்பணம் — ரூ. 3—0 | வாரப்பதிப்பு. | வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1. |
| 6-மாத சந்தா ,, — ,, 1–12 | | கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2. |
| வெளி நாட்டிற்கு ,, — ,, 4—0 | ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி. | நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 5 | ஈரோடு, சுக்கில ஞு பங்குனி மீ 3உ (16—3—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 42

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார்செய்யப்பட்டது.

உலகப் பிரசித்தி பெற்ற

## மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு. கண்ணில் நீர்வடிதல், கண் பூ. பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, தேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4.   12 அவுன்ஸ டின் ரூ. 2—2—0

## சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலைசெய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தைமுற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாபபிட மதுரமுள்ளது. 2

ஒரு சேர் டப்பி விலை ரூ. —8—0

## மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா. 8. க்ரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் வல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

**டி. சி. சிங்காரம் அண்டு கோ,**

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

# திருப்பூர் கதர் & பனியன்ஸ்.

உங்களுக்கு எது வேண்டும்!

கதர் வேண்டுமா! பனியன்கள் வேண்டுமா!!

எது வேண்டுமானாலும் அனுப்பலாம்

விலை தபால் பாக்கிங் சார்ஜ் உள்பட

| உள் நாடு | வெளி நாடு |
|---|---|
| 32 இஞ்சு பனியன் டஜன் 1-க்கு 5-8-0 | 32 இஞ்சு டஜன் ஒன்றுக்கு 6-8-0 |
| ,, அரை டஜன் 2-14-0 | ,, 2 டஜன்கள் 12-0-0 |
| ,, கால் டஜன் 1-8-0 | ,, 3 டஜன்கள் 17-8-0 |

வேண்டியவர்கள் அடியிற் கண்ட விலாசத்துக்கு ஆர்டர் செய்யவும், வெளிநாடு ஆசாமிகள். பூராவும் முன்பணம் அனுப்பவேண்டும். கதர் ஜவுளி தினுசுகளின் விலை விபர ஜாபிதாவுக்கும் எழுதுங்கள். விலை சரசம்.

M. V. Karuppanna Chettiar, *Khaddar Merchant*, TIRUPUR. (S. India.)



# ஞானசூரியன்.

மக்கள், மூடநம்பிக்கையிலிருந்து விடுபடவேண்டுமானால், மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டுமானால், இவற்றிற்கு அடிப்படையாகவுள்ள—கடவுளாலும், கடவுளைக் கண்டவராலும் சொல்லப் பெற்றவை என்னும் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், இவைகளிலிருந்து தோன்றிய ஜாதி வித்தியாசம், தீண்டாமை, பெண்பால் அடிமை, கடவுள் பெயரைச்சொல்லிப் பணம்பறிக்க ஏற்பட்ட பார்ப்பனக் கோட்டைகளாகிய கோயில்கள், பார்ப்பன ஆதிக்கமும் செல்வாக்கும் குறையாதிருக்க ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட மதங்கள், இருப்பார்க்கு புண்ணியம் சம்பாதித்துக் கொடுப்பதாயும், இறந்தார்க்கு மோட்சத்திற்கு நேர்வழி காட்டுவதாயும் ஏய்த்து, வயிர் வளர்க்க கையாளப்பெறும் புரோகிதம், முதலியவைகளின் ஆபாசங்களை மக்கள் உணரவேண்டும். உணர்வார்களானால் அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு, மூடநம்பிக்கையிலிருந்தும், மூடப்பழக்க வழக்கங்களிலிருந்தும் தாங்களாகவே கரையேறுவார்கள்.

இவ்வுணர்ச்சியை மக்கட்கு உண்டாக்கும் பொருட்டே மூடிமூடி வைக்கப்பட்ட கடவுள் வாமெனப்படும் நூற்களின் ஆபாசங்களை நன்கு ஆராய்ந்த நுண்ணறிவாளர்களது துணைகொண்டு பல அறிவு விளக்க நூற்களாக மிகக் குறைந்த விலைக்கு வெளியிடக் கருதி—"குடி-அரசு பதிப்பகம்" என்னும் பெயரால் ஒரு வெளியீட்டுக்கழகம் நிறுவியுள்ளோம்.

முதலாவதாக "ஞான சூரியன்" என்னும் அரும்பெரும் நூலை 2000 காபிகள் அச்சிட்டு, அதன் முன் விலையின் பாதி விலையாகிய 0—8—0க்குக் கொடுத்தோம் சென்ற ஏழெட்டு மாதங்களுக்குள் அவ்வளவு பிரதிகளும் செலவாய் விட்டமையால் தமிழ்நாட்டில் அப்புத்தகத்திற்குள்ள மதிப்பை உணர்ந்து பொருள் நிலை இடந்தாராத ஏழைகளும் வாங்கிப்படித்து பயனடையுமாறு 4000 பிரதிகள் அச்சிட்டு 0—4—0 விலைக்குத்தர முன்வந்துள்ளோம்.

செல்வம் படைத்த சீமான்களும் நமது இயக்கத்தில் நோக்க முள்ள அன்பர்களும் நூற்றுக்கணக்காக இப்புத்தகத்தை வாங்கி ஏழைகளுக்கும் மாணவர்களுக்கும் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

பிரதி 1-க்கு விலை 0—4—0

தபால் செலவு வேறு.

## இராமாயணத்தின் ஆபாசம் 0—4—0.

முன்பணத்துடன் வரும் 10 புஸ்தக ஆர்டர்க்கு ஒரு புஸ்தகம்இனாம்.

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாடு சொற்பொழிவு 0—2—0


## நோட்டீஸ்

கோயமுத்தூர் ஜனோபகார நிதிலிமிடெட் பாங்கியில் பங்குகாரருயிருந்து சுமார் 6 மாதத்திற்குமுன் இறந்து போன கோயமுத்தூர் வெள்ளிங்கிரிகவுண் குமாரத்தியும் குட்டியா டர் மனைவியுமான மல் ளுக்கு இந்த நிதியில் ரூ. பொருமான முழுபங்குகள் ருக்கின்றன. டி மல்லாயம்மாளால் டி நிதிக்கு பங்கு பொருப்பு கடனில அசல் ரூ. 1300 ம் அதற்கு நாளது தேதி வரை வட்டி ரூ. 146 ம் ஜாமீன் கடனில் அசல் பாக்கி ரூ. 700 ம் அதற்கு நாளது தேதி வரை வட்டி ரூ. 83 ம் வசூலாக வேண்டியிருக்கிறது. மேற்படி மல்லாயம்மாளின் வார்சுகள் நாளது தேதியிலிருந்து ஒரு மாதவாய்தாவுக்குள் தங்களுடைய வார்சு உரிமையை சரியானபடி ரூபித்துக்கொடுத்து மேற்கண்டபாக்கிகளைச்செலுத்தி பங்குகளை தங்கள் பேருக்குமாற்றிக்கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி முழுபங்குகளை 1930 ஞு ஏப்ரல் மீ 10 வ வியாழக்கிழமைகாலை 9 மணிக்கு நிதியின் ஆபீசில் பகிரங்கமாய் ஏலம் போட்டு ஏலத்தில் வசூலாகும் தொகையை மேற்படி கடன்களுக்கு வஜா வைத்துக்கொண்டு மீதம் ஏதேனும் ஏற்பட்டால் அதை வார்சுதாரருக்கு கொடுக்கப்படும் அப்படி ஏலத்தில் வசூலான தொகை மேற்படி கடன்களுக்கு போதாமலிருந்தால்மேற்படி மல்லாயம்மாளின் இதர சொத்துக்களின் பேரில்தொடரப்படும்.

கோயமுத்தூர் 1930-ஞு மார்ச்சு 5 வ } C. G. நடராஜ முதலியார், செக்ரிடெரி.

கோயமுத்தூர் ஜனோபகார நிதி லிமிடெட்


## தேவை

நன்கு வேலை செய்யக்கூடிய 8 முதல் 12 குதிரைப்பவர்(N.H.) வரையுள்ளதுமான ஸ்டிம இஞ்சின் வைகளை ஒன்றுசேர்ந்ததாகவும், வெவ்வேருகவும், பாயிலர் மட்டுமாகவோ யிருக்கலாம். காரியஸ்தர்,

தீப்பெட்டி கம்பனி

பாலக்காடு (தென்மலபார்)



## மதன லீலா படங்கள்

**64** வகை சிற்றின்ப ரகசியஉருவ ஒரிஜினல்போட்டோகிலேஸ் படங்கள் சதிபதிகளும் தனி மாதர்களும் கூடியது. அழகியஆல்பம் உள்படவிலை. 5—0—0

சே. ஜ். ஸ்டோர்,

வேப்பேரி, மதராஸ்.

# சுயமரியாதைச் சங்கத்தலைவருக்கு எனது விண்ணப்பம்.

கைவல்யம்.

பிர்மஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளிடமிருந்து தங்களுக்கு அனுப்பின ஸ்ரீ முகத்தையும் அதைப்பற்றி தாங்கள் எழுதியிருக்கும் குறிப்பையும் மார்ச்சு 2 தேதிக் "குடி அரசில் படித்தேன் அதில் பெரியாரின் அழைப்பிற் கிணங்கிப் போக வேண்டியது நியாயமெனத் தாங்கள் தீர்மானித்து ஆயினும் தங்கள் நண்பர்களின் விருப்பத்தை அறிந்து சென்று வரலாமென்று கருதியிருப்பதாகவும்குறித்திருக்கிறீர்கள்.

தங்களுக்குப் பயமுறுத்தற்கடிதங்கள் வந்திருப்பதாலும் பயங்கரத்தை விளைவிக்கத்தக்க யாதொரு வதந்தி உண்டாயிருக்கும்போதும் அதிகப்பழக்கமில்லாத கூட்டங்களின் மத்தியில் எவ்வளவு தைரிய புருஷனாயிருந்தாலும் திடீரென்று அவசரப்பட்டு போவது சரியல்லவென்றும் நமது பூர்வீக சமய ஆச்சாரிகளின் கோஷ்டிகளுக்குள் சூட்சிகளினால் பலவாறு வஞ்சனை நடந்திருப்பதாக கதைகளிருப்பதினாலும் தங்கள் நண்பர்களால் பல ஆலோசனைகள் கூறப்பட்டிருக்கும் என்றாலும் சுயப்பிரயோஜனத்தை நாடிக்கொண்டுத்தன்னைக்காப் பாற்றித்திரிகிறவன் ஜன சமூக வாழ்க்கைக்கு உதவமாட்டான் அப்படிப்பட்டவன் யாராலும் அருவருக்கத்தக்கவனுமாகிறான். ஒரு மனிதன் விஷயத்தில் சுயப்பிரயோஜனம் எப்படி அருவருக்கத்தக்கதுமாயிருக்கிறதோ அப்படியே ஒருவன் தன் பொருளையும் உழைப்பையும் செலவிடுவதுபோல தேகத்தையும்உயிரையும் தியாகம்செய்வானாகில் அதற்குத் தகுந்தவாறு புகழப்படுகிறான். இவற்றை உணர்ந்திருக்கும் தாங்கள் பிறரோடும் கூட்டுறவு கொண்டு மேலான எங்கள் எண்ணம் எல்லோருக்கும் பயன்படச்செய்வீர்களென்று எண்ணுகிறேன்.

இப்பொழுது தாங்கள் அழைக்கப்பட்டிருக்குமிடமோ நமது தேசத்தில் முக்கியத்திலும் முக்கியமான ஸ்தானம். அதை ஸ்தாபித்த ஆதி சங்கரர் மனிதனின் பகுத்தறிவாலும்அருளறிவாலும் மனிதர்கள் அறிவுஎட்டமுடியாத அவ்வளவு தூரம் சென்று தத்துவ விசாரணையை நிலைநிறுத்தினவர். அறியாமையால் கட்டும் அறிவினால் விடுதலையும் கைகூடும்என்பதை அறிந்து தன்னை சர்வத்திலிருந்தும் பிரிவாகக்காணுதல் உலகமும்தானும் ஒன்றெனக் காண்பதே உண்மையறிவு என்பதையும் தெரிந்த பழங்காலத்து முன்னோர்களான ஆரண்ணிய ரிஷிகள் காலம் மாறி பௌத்த சந்நியாசிகள் காலம் வந்து மேற்கூறிய மகத்தான ஞானத்தை உலகத்திலிருந்து பிரித்து உலகத்தைத்துறப்பதே முக்தியென்னும் உபதேசத்தில் நமது தேசம் பழக்கப்பட்டிருந்த சமயம் சங்கரர் தோன்றி தன்னிடம்உலகத்தையும் உலகத்தினிடம் தன்னையும் காண்பவனே உணமைகாண்பான் என்னும் தத்துவத்தால் ஞானத்தையும் அதோடு கர்மத்தையும் சேர்த்து சாஸ்திர விசாரமும் வேதாந்தமும் எவ்வளவு சிறந்தவையா யிருப்பினும் மரண மென்பதொன்று இவ்வுலகத்திலுள்ள வரையிலும் துர்பலம் என்பதொன்று இருதயத்திலிருக்கும் வரையிலும், அந்தத் துர்பலத்தன்மையினாலேயே மனிதன் உள்ளம் கரைந்து ஒன்றும் தோன்றாமல் ஓலமிடுகிறவரையிலும் கடவுள் நம்பிக்கை என்பது இருந்தே தீரவேண்டும். ஆனால் அந்த கடவுளை அடையுமார்க்கமான பக்திமார்க்கத்திறகோ ஞான மார்க்கத்திற்கோ மற்றெந்த மார்க்கத்திற்கும் சமயக் கோட்பாடாவது ஜாதியாவது வர்ணமாவது கோத்திரமாவது ஒருவிதக் கொள்கையாவது அவசியமில்லை என்று சொன்னவைகளும் தங்களுக்குத் தெரியும்.

பிராமண மதத்தினால் நடத்தப்பட்டு வந்த கொடுமைகளைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று பௌத்தமதத்திற்கிருந்த வராக்கியமும் ஸர்வ பிராணிகளின் விஷயத்திலும் பிரவர்த்தித்த ஆச்சிரியமானகாருண்யமும் தர்ம குணமுமான பௌவுத்தமதம் நமது நாட்டிலிருந்த காலத்தில் இந்துவாயுள்ள எவனும் பொய் சொன்னதில்லை என்றும் இந்து ஸ்திரீயாயுள்ளவள் எவளும் கற்பு நிலைதவறினதில்லை யென்றும் கிரீக் வித்வான்களே எழுதியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பௌவுத்த தருமத்தையும் நீதியையும் நமது நாட்டிலிருந்து போக்கின பிராமண மதத்தின் ஆதி சங்கராச்சாரியைப்பற்றி வருத்தப்பட்டவர்களின் விவகாரங்களும் தங்களுக்குத்தெரியும்.

ஆனால் ஆதி ஆச்சாரிய சுவாமிகள் சொன்ன உண்மைகளை அவர் சிஷியர்கள் உணராமலும் காரிய மேலீட்டில் பார்ப்பார்களின் கூட்டமனதில் ஆச்சாரி சுவாமிகளின் பதவியை வகிப்பவர்கள் அடங்கி விட்டதாலும் சங்கருடைய சாஸ்திரக் கொடிகள் ஆச்சாரிய சுவாமிகள் சொன்ன கர்மத்திற்குப்பலவாறு அர்த்தம் செய்து பொது நிலையை விட்டு தொழிலாளி, வியாபாரி என்னும் நிலையில் இருப்பவர்களைப்போன்று மதத்திற்கு அதிகாரியாகி சமஸ்கிருதபாஷை அவர்களிடமே பரவியிருந்ததினால் அவரவர்கள் வியாக்யானங்களும் கொள்கைகளுமே பரப்பப்பட்டு அதனால் அவர்களைச் சுற்றி இறுகலான ஒடுதோன்றி சமயமென்னும் தொழிலாளித்தனம் என்றநாளத்திலே அவர்கள் தத்தம் அறிவுகளுக்குத் தனிவழிகள்காட்டித் தமது பலத்தைச் சேர்த்து தாம் தாம் முற்படவேண்டுமென்று செய்த பிரயத்தினத்தினால் தருமக்குறைவையும் குருட்டறிவையும் உண்டுபண்ணிசமூகங்களின் ஆரோக்கிய வரம்பையும் கடந்து அது மனிதனை அடிமைப்படுத்தவும் குறுக்கவும் கடினமாக்கவும் செய்து சமயத்தலைவர்களை லௌகீக லாபம் தேடுகிறவர்களாகவும் செய்துவிட்டது. அதனாலே தான் இக்காலத்திலும் இதற்குச் சிறிது முற்பட்ட காலத்திலும் ஜாதி யாச்சாரங்களில் எத்தனை குறுகுதலும் அநாகரீகமும் மடமையும் கொடுமையுமிருந்தும் சங்கரமடத்திலிருந்தும் சமயம் படித்தவர்களிடமிருந்தும்யாதொரு ஆக்ஷேபமும் பிறக்கவில்லைஎன்பதையும் தாங்களறிவீர்கள்.

ஆதிசங்கரர் சீர்திருத்த வந்தவர் என்றாலும் அவருடைய சீர்திருத்தம் பார்ப்பாருக்குப் பலனளித்து மற்றவர்களுக்குத் தீரா விலங்காய் முடிந்ததைத் தீர்ப்பதற்கே ஆதி சங்கர பீடத்தின் சத்தியம் உங்களை அழைத்ததென்று நினைக்கிறேன்.

தங்கள் நண்பர்களின் ஆலோசனையின் பேரில் ஆச்சாரிய சுவாமிகளைக் காணச்சென்றால் தங்கள் நண்பர்களிற் சிறியேனாகிய நான் எழுதும் இக்கடிதத்தின் முக்கிய விஷயங்களை சந்நிதானத்தில், தெரியப்படுத்தும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்களுடைய சங்கத்தில் தீண்டாமை போகவேண்டியது முக்கிய கொள்கையாகும். சிவ பெருமானுக்குத் தீண்டாமை இருப்பது சம்மதமில்லை. ஆதி சங்கராச்சாரியார் பிராமண ஜாதியில் பிறந்தபடியால் அவருக்கும் அஞ்ஞானத்தால் ஜாதி அபிமானமுண்டாயிற்று அதைப்போக்கடிக்க பரமசிவன் பறையன் வேஷம் தரித்துவந்து சங்கருக்குச் சொன்ன விஷயமும் அதனால்சங்கரர் உணர்ந்த ஞானத்தையும்இதனடியில் சொல்லுகிறேன்.

பார்ப்பார ஜாதிக்குள்ள தீண்டாமை என்னும் அஞ்ஞானத்தை மேற்கொண்டு மதஸ்தாபனம் செய்யக் காசிக்கு வந்த சங்கராச்சாரியை பறையன் வேஷம் தரித்த பரமசிவன் குறுக்கிட்டார். அப்பறையனைக்கண்டு சங்கராச்சாரி 'ஏ சண்டாளா' விலகிப்போ' என்றார். அப்பொழுது பறையன் வேஷம் தரித்திருக்கும் பரமசிவன்

"ஏ சந்நியாசி நான் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத்தக்க பதில் சொல்லக்கடவாய். அன்ன விகாரமாகிய உன் சரீரத்தை விட்டு அன்னவிகாரமாகிய என் சரீரத்தை விலகும்படி சொல்லுகிறாயா? அல்லது சைதன்னிய சொரூபமான உன்பிரத்தியகாத்மாவிலிருந்து பிரத்யகாத்ம சொரூபமான என் சரீரத்திலிருக்கும் பிரத்தியகாத்மாவை விலகிப்போவென்று சொல்லுகிறாயா? உன் சரீரம் யெப்படி அன்னமயகோசத்தினால் உண்டாயிற்றோ, அதுபோலவே என் சரீரமும் அன்னமயகோசத்தினாலுண்டாயிற்று. ஆதலால் இரண்டு சரீரங்களும் ஒன்றாயிருக்க உன் சரீரம் சுசியானதும் என் சரீரம் அசுசியானதும் என்று எப்படிச் சொல்லலாம்? என் சரீரம் அசுசி யென்றால் உன் சரீரமும்அசுசியானதே. ஆதலால் சரீரத்தைப் பார்த்து விலகியிரு என்று சொல்லுவது யுக்தமானதன்று நம் இருவருடைய சரீரமும் அசுத்தமே யென்று சொல்லுவதற்கு வேதம் பிரமாணம் பொதுவாயிருக்க உன் சரீரம் சுத்தமென்றும், என் சரீரம் அசுத்தமென்றும் சொல்லுவது நியாயமாகாதே வேதசம்மதமுமல்லவே.

பிரபஞ்ச மெல்லாம் மாயா சொரூபமாயிருக்கின்றது. ஆதலால் ஒரே விதமாயிருக்கும் அன்ன ரசத்தினால் உண்டாகிய சரீரங்களைக்குறித்து அபிமானம் வைக்கலாகாது. சைதன்னிய சொரூபமான பிரத்யகாத்ம சொரூபம் உன் சரீரத்திலும் என் சரீரத்திலும் இதர பிபீலிகாதி சரீரத்திலும் ஒரேவிதமாயிருக்கின்றது. இது விஷயத்தில் நீ என்னை விலகச் சொல்ல நியாய மில்லை. இந்த நியாயத்திற்கு விரோதமாக சுருதியில் பிரமாணமுமில்லை.

துக்க மயமாகிய அகங்காரங்களுக்கெல்லாம் வேராயிருந்து பிரகாசித்துக்கொண்டிருக்கும் பரப்பிரமத்துடன் சேர்ந்திருப்பவனுக்கு அலைகளில்லாத சமுத்திரம்போல சங்கல்ப விகல்ப மில்லாதவனுக்கு இவன் பறையன் இவன் பிராமணன் என்னும் பேதம் எங்கிருந்துண்டாயிற்று? கங்கா நதியிலும் பறையன் வீதியிலுமிருக்கும் ஜலத்தில் பிரதிபிம்பித்திருக்கும் சூரியனுக்கு எப்படி பேதமில்லையோ அப்படியே பிரத்திய ஆத்மாவிற்கும் பரமாத்வா விற்கும் பேதமில்லை. ஆகாயத்திற்கும் ஆகாசத்திற்கும் குணபேதகங்கள் எப்படி இல்லையோ அப்படியே ஆத்மாவிற்கும் பரமாத்மா விற்கும் குணதோஷங்களில்லை. ஆத்ம வஸ்துவில் பேதபுத்தியுடன் எவன் பார்க்கிறானோ அவன் ஜனனமரண ரூபமாயிருக்கும் சம்சாரத்திலிருந்து விடுபடமாட்டான். ஆனதால் எங்கும் அகண்டானந்த சொரூபமாய் பிரகாசித்து விளங்கும் பரப்பிர்மத்திற்கு பேதபுத்தி யுண்டென்று நீ எப்படிச்சொல்லலாம்"

என்று சண்டாள வேஷதாரியாகிய பரமேசுவரன் கேட்டார்.

இவ்விதமாய் சண்டாள வேஷத்தைத் தரித்து வந்த பரமசிவனது வார்த்தையை சங்கராச்சாரியார் கேட்டு ஜாதி பேதமில்லாதவராய் உண்மையை உணர்ந்து அங்கிருந்த தனது சிஷியர்களையும் பார்ப்பார்களையும் பார்த்து சமாதியில்லாமலே வர்ணச்சி

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீ விஷ்ணுவுக்கும் சிவபெருமானுக்கும் வாக்குவாதம்.

ஒரு நாள் திருக்கைலாச மலையிலே சித்தர், கணநாதர், தேவர், முனிவர் முதலானோர் சூழ சிவபெருமான் தன மனைவி பார்வதியுடனும் இரு புதல்வர்களான விநாயகர் சுப்பிரமணியருடனும் வீற்றிருந்தார். அப்போது ஸ்ரீ விஷ்ணுபகவான் தனது மைத்துனரான சிவபெருமானைக் காணவேண்டுமென்ற ஆசையினால் கைலாச பர்வதத்தையடைந்து சிவபெருமான் சந்நிதியில் நுழைந்தார். விஷ்ணுவின் வருகையைக் கண்ட சிவபெருமான் தன் இருக்கையை விட்டெழுந்து; மிக்க சந்தோஷத்தோடு அத்தான் வாருங்கள்! வாருங்கள் சுகந்தானா? எது ரொம்ப நாட்களாக தங்கள் முக தரிசனத்தைக் காணக்கூட முடியவில்லையே.. மைத்துனரை மறந்து விட்டீர்களா? அல்லது பாற்கடலில் ஆதிசேஷசயனத்தில் அதிக நாள் உறங்கிவிட்டீர்களா? என்ன வரவர பெருந் தூங்கு மூச்சி ராயராகிவிட்டீர்களே ஒரே பாயும் படுக்கையுமாகவே கிடக்கின்றீர்களே தூக்கத்தில் கும்பகர்ணனுக்குக் கூட அண்ணனாகப் போய்விட்டீர்களே என்று கூறி நகைத்தார், இந்த வார்த்தைகளைக்கேட்டு பக்கத்திலிருந்த கணநாதர், சித்தர் முதலியோரும் சிரித்தனர். சிவபெருமானுடைய குறும்புத்தனமான வார்த்தைகளைக் கேட்ட விஷ்ணு அடக்கமுடியாத கோபத்தை யடைந்தார். ஆனாலும் கோபத்தையடக்கிக் கொண்டு தானும் கேலியாகப்பேச ஆரம்பித்தார்.

விஷ்ணு:—மைத்துனரே! நீங்களிருக்கும் வரை சுகத்திற்கென்ன குறைவா. ஆனால் தங்களுக்கு இப்போது உடம்புக்குக் குணமாகயிருக்கின்றதா கொஞ்சநாளைக்கு முன்பு தங்களுடைய தங்கை லட்சுமி என்னிடம் வந்து உங்களுக்கு சித்தங்கலங்கி பித்தம் பிடித்து விட்டதென்றும், வெறியனைப் போல கண்டதைப் புசிப்பதும் எலும்புகளை மாலையாக அணிந்து சுடுகாட்டில் புரளுவதும், மானம் வெட்கமில்லாமல் பிச்சையெடுத்துண்டு வயிறு வளர்ப்பதாகவும் சொன்னாள். அதைக்கேட்டு யானடைந்த வருத்தத்திற்கோரளவில்லை. அதே கவலையினால் மனமுடைந்து துக்க சாகரத்திலாழ்ந்து விட்டேன் பின்னால், தங்களுக்கு சித்த சுவாதீனமாகி விட்டதென்று கேள்விப்பட்டு, தங்களைப் பார்த்து விட்டுப் போகலாமென்று இங்குவந்தேன் என்றுகூறினார்.

விஷ்ணுவின் இறுமாப்பான வார்த்தைகளைக்கேட்டசிவபெருமானுடைய கண்கள் கோவைப் பழங்களைப்போல் சிவந்தன கோபத்தால் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டும் புலித்தோலை வரிந்துகட்டிக்கொண்டும், அண்ட சராசரபுவனமெல்லாம் நடுங்கும்படி கர்ஜித்தார். சிவபெருமானின் கோபாவேசத்தைக் கண்டு பக்கத்திலிருந்த பலரும் உலகமே அழிந்துவிடுமோ வெனப்பயந்து நடுங்கி ஒடுங்கி ஒளிந்து கொண்டனர்.

சிவன்:—ஓய் விஷ்ணுவே! யாரிடம் வந்து கேலிப்பேச்சு பேசுகின்றீர். உமமுடைய குட்டு நட்டுகளும் உருட்டல் பிரட்டல்களும் எமக்குத் தெரியாதென்று நினைத்தீர். ஜாக்கிரதை.

விஷ்ணு:—ஓய் சிவனே! வாயை மூடும். உம்முடைய அயோக்கியத்தனங்களை [illegible] கதைகளை உலகமறியுமே. ஒரு காலத்தில் பத்மாசுரனைத் தொலைப்பதற்காக நான் மோகினி அவதாரமெடுத்தபொழுது, நீர் யென்னைக்கண்டு வெருட்டவும் நான் பயந்து பக்கத்திலிருந்த பெருமாள் கோவிலுக்குள் ஓடி ஒளிந்து கதவைச் சாத்திக்கொண்டதும். மோகக்காமம் பிடித்த நீர் கதவின் துவாரத்தின் வழியாக மோகத்தைத் தீர்த்துக்கொண்டதும் அந்த ஸ்கலிதத்திலிருந்து ஐயனார் பிறந்தது உமக்கு ஞாபகமில்லையா?

சிவன்:— ஓய் மானங்கெட்ட விஷ்ணுவே! உம்முடைய விபசாரத்தனம் யாருக்குத்தான் தெரியாது. நீர் ஜலந்தராசுரனுடைய மனைவியான பிருந்தையென்பவளை அயோக்கியத்தனமாகக் கற்பழித்ததும் அதனால் அவள் தீப்பாய்ந்து உயிர் விட்டபின்னரும் அவளுடைய சாம்பலில் புரண்டு உருண்டு புலம்பித் திரிந்ததும், பிரமசாரி என்று சொல்லிக்கொண்டு ஆயிரக்கணக்கான கோபிகா ஸ்திரிகளை கட்டிப்புரண்டு திரிந்ததும் உலகமறியுமே.

விஷ்ணு:— ஓய் கருணையில்லாத சைவக் கடவுளே! நீர்தானா யென்னைக் குற்றம் சொல்வது. உம்மைப்போல ஈவிரக்க மற்ற கன்னெஞ்சப் பாவியை எவ்வுலகத்திலும் கூடக் காணமுடியாதே பக்தர்களை சோதிப்பதாகச் சொல்லி சிறுத்தொண்டனிடம் போய் அவனுடைய அன்பான மகனை அறுத்துக் கறி சமைத்துக்கொடுக்கும்படி கேட்டீரே! இதுதானா உம்முடைய கருணை? சரி அதுமிருக்கட்டும்; மானக்கஞ்ச நாயனாரிடம் போய் "பக்தனே! உன்னுடைய மனைவியை எனக்குக் கொடுக்கிறாயா?" என்றுகேட்டீரே அது தானா ஒரு கடவுளுடைய யோக்கியதை? மேலும் திருஞான சம்பந்தன் என்ற உம்முடைய பக்தனை கொண்டு 8000 சமணர்களைக் கழுவேறச் செய்ததும் கொடுமையிலும் கொடுமையல்லவா? அதுவும் போகட்டும்; ஒரு பெண்பாலான காளியிடம் சென்று உலகத்தாரெல்லாம் சிரிக்கும்படி காலைத்தூக்கி கழுத்தில் மாட்டிக் கொண்டு ஆடினீரே! அதைவிட வடிகட்டின 'முட்டாள் தனம் வேறெதுவேனும் உண்டா? சொல்லும்.

சிவன்:—எய் போக்கிரி விஷ்ணுவே! அதெல்லாமிருக்கட்டும். உம்முடைய வண்டவாளங்களைக் கொஞ்சம் சொல்லட்டுமா? சகோதரத் துரோகியான சுக்ரீவன் பேச்சைக் கேட்டு ஒன்றுமறியாத குரங்கரசனாகிய வாலியை மரத்தின் மறைவில் ஒளிந்து கொண்டு அம்பெய்து கொன்றது பேடித்தனமல்லவா? மற்றுமொரு கோடாலிக் காம்பான விபீஷணனை வஞ்சகமாக ஏமாற்றி அவனைக் கொண்டு தந்திரமாக சூழ்ச்சி செய்து இராவணனையும் அவன் குலத்தாரையும் அடியோடு கொன்று அழித்தீரே அதை விடப்போக்கிரித்தனம் வேறு உண்டா? பின்னும் ஒரு பார்ப்பனக் குழந்தை இறந்ததற்காக தவஞ்செய்த சம்புகன் தலையை வெட்டி வீழ்த்தினீரே! அதைவிட வேறு முட்டாள்தனம் உண்டா? சரி அதெல்லாம் போகட்டும்; முன்னொரு காலத்தில் தேவகன்னிகைகளில் சிலர் குளித்துக் கொண்டிருக்கையில் அவர்களுடைய புடவைகளை திருட மரத்தில் தூக்கி வைத்துக்கொண்டு மானபங்கம் செய்தீரே! அந்தத் திருட்டுத்தனங்களையெல்லாம் நினைத்துவிட்டால்எனக்கு அடக்கமுடியாத சிரிப்பு வருகின்றது.

விஷ்ணு:—ஓய் சுசினதேவனென்ற சிவபெருமானே! உம்முடைய மானங்கெட்ட ஈனத் திருவிளையாடல்களெல்லாம் யாருக்குத்தெரியாது மதுரைக் கோவிலில் கூட அந்த ஒழுக்கங்கெட்ட திருவிளையாடல்களெல்லாம் படமெழுதி வைத்துக் கொண்டு ஜனங்களெல்லாம் பார்த்துச்சிரிக்கும்படி செய்து வருகிறீர்களே! அதைக்கண்டாவது உமக்கு ரோசமுண்டாகவில்லையா? தாயைப்புணர்ந்து தகப்பனைக் கொன்ற ஒரு மாபாதகப் பார்ப்பனனுக்கு மோட்சம் கொடுத்தீரே! என்ன கருணை! ஏய் பகுத்தறிவற்ற பிண்டமே! மானங்கெட்டு மரியாதை யிழந்து நீரும் உயிரோடிருக்க வேண்டுமா? தற்கொலை செய்து கொள்ளுமே.

சிவன்:—ஏய் அறியாமை முண்டமே! நான் தற்கொலை செய்து கொண்டு மாண்டால் உம்முடைய தங்கை தானே தாலியறுக்க வேண்டும். அது கூடத் தெரிந்து கொள்ளாத நீரா எம்மைக் கேலி செய்வது? அந்தோ! பன்றியாகவும், ஆமையாகவும்; மீனாகவும் அவதாரமெடுதத உமக்கு பகுத்தறிவு எங்கிருக்கும்! நீர் அணிந்திருக்கும் பட்டைநாமத்தைப் பார்த்துப் "புணர்ச்சிக்குறியின் அடையாளம் என்று மில்மேயோ வென்ற அமெரிக்க மாதுகூடச் சொல்லி சிரிக்கின்றாளே. அது கூட உமக்கு மானமில்லையா? இதைக்கேட்ட ஸ்ரீ விஷ்ணுபகவானுக்கு கொடியகோபம் பிறந்தது. "ஓய் சிவனே! மரியாதை, ஒழுக்கம், உண்மை, பொறுமையில்லாத உன்னைப் போன்ற கசடர்களை சங்காரஞ் செய்வதே என்னைப் போன்ற சுத்த வீரர்களுக்கு அழகு ஆதலின் இதோ உன்தலையை வெட்டி வீழ்த்துகிறேன்.' என்று கூறிக்கொண்டு தமது சக்ராயுதத்தை யெடுத்தார். சிவபெருமானும் தனனிடையில் சொருகி வைத்திருந்த மழுவாயுதத்தை யெடுத்துக்கொண்டு சண்டைக்குத் தயாராகவிருந்தார். அப்போது திரிலோக சஞ்சாரியாகிய நாரதர் பார்த்து ஐயோ மோசம் போய்விட்டதென்று இருவருக்கும் மத்தியில் வந்து நின்றுகொண்டு "கடவுள்களே! பொறுங்கள்' பொறுங்கள்! நீர் ஆலோசித்தே ஒரு காரியத்தைச் செய்யுங்கள் வீணாக உலகத்தை அழித்துவிடவேண்டாம்" என்று கூறி இருவரையும் நமஸ்கரித்தார். உடனே இருவருக்கும் கோபம் சாந்தமடைந்து, தங்கள் தங்கள் ஆயுதங்களை உறையில் போட்டுக் கொண்டு நாரதரிடம் நடந்த சங்கதியை சொன்னார்கள்.

நாரதர்:— கடவுள்களே! நீங்கள் இவ்விதம் நடத்தி கொள்வதினாலல்லவா பூவுலகத்திலுள்ள சுயமரியாதைக் கட்சிக்காரர்கள் நம்மையும். நம்மைப் பற்றிய சாஸ்திர புராணம் இதிகாசங்களையும் அலட்சியம் செய்கின்றார்கள். நம்முடைய பக்தர்களையும் கவனிக்கின்றார்களில்லை. அதற்காக நம்முடைய பக்தர்களில் சிலர் மேற்படி கட்சியார்களை 'அழிப்பதற்கு நீங்கள் அவதாரம் செய்யவேண்டு மென்று தவங்கிடக்கின்றார்களே. அதுகூட உங்களுக்குத் தெரியவில்லையா. வாருங்கள் அதைப் பற்றிப் பேசலாம் என்று இருவரையும் அழைத்துக்கொண்டு சென்றார்.

## சங்கத்தார் குறிப்பு

அன்பர்களே!

மேலே காட்டிய கதை எம்முடைய சொந்தக் கருத்தோடெழுதியதல்ல தூஷணையாகவோ, பொய்யாகவோ எழுதியதுமல்ல. திருவிளையாடல் புராணம், பெரிய புராணம், ராமாயணம், பாரதம், பாகவதம் முதலான புராண இதிகாசங்களை ஆதாரமாகக் வைத்துக்கொண்டே எழுதப்பட்டதாகும். ஆதலின் வைதீக அன்பர்கள், எங்கள் மேல் சீறி விழுந்தால் எய்தவனிருக்க அம்பை நொந்த கதையாகுமென்று எச்சரிக்கை செய்கின்றோம். எங்களுடைய நோக்கமெல்லாம் ஒழுக்க நிறைந்த எந்த புராணம் சாஸ்திரமானாலும் அவைகளை மகிழ்ச்சியோடு யேற்றுக்கொள்வதும், அதற்கு மாறுபட்டவைகளை தைரியத்தோடு அழித்து சீர்திருத்துவதுமேயாகும். ஆதலின் உண்மையை யுணர்ந்த மக்களெல்லோரும் எங்களுடன் ஒத்துழைப்பார்களாக.

சீர்திருத்தச் சங்கத்தார்,
இராஜபாளையம்

# இதிகாசங்கள்.

## இராமாயணம்—உயுத்த காண்டம்

### கட்டுரை—2

திரு. சந்திரசேகரப்பாவலர்)

(சருக்கங்கள் 6 முதல் 15 முடிய)

அனுமான் செய்த செயல்களால் நாண முற்ற இராவணன் சற்று தலை குனிந்து, "ஒரு அற்ப குரங்கால் நமது பெருமை குறைந்தது. இராமன் இலங்கையை முற்றுகை யிட்டால் யாது செய்வோம்?" எனத் தனது அமைச்சரிடம் வினவினான். அவர்கள், "எங்கள் அரசே! தங்களுக்கு ஒப்பாக யாருளர்? இந்த அற்பர்களால் என்ன ஆகும்? நமது இந்திரசித்தை அனுப்பினால் அவர்கள் அழிவர்" என்றார்கள். பிரகத்தன், துர்முகன், வச்சிர தம்புரன், நிகும்பன் முதலிய அரக்கர் தாம் சென்று பகைவரை அழிப்பதாகக் கூறினர். அப்போது வீடணன் அவர்களைத்தடுத்து "நாம் இப்போதே தண்டத்தை உபயோகித்தல் கூடாது. இராமன் மிகவும் சிறந்த வீரன், வல்லவன். அவனோடு நாம் போரிடநியாயமே இல்லை. அவன் இராவணனுக்குஎன்ன குற்றம் செய்தான்? கரனாதியோரைக்கொன்றானென்றால் கரனே வலியச் சண்டைக்குப் போனான். இராமனே குற்றம் செய்தாலும் அவனுடைய மனைவியை எடுத்து வரலாமா? ஆதலின் சீதையை இராமனிடம் விட்டு விடுவதே நலம்" என்று கூறினான். இராவணன், "எல்லாம் நாளைக்காலை எண்ணுவோம்" எனக்கூறி அரண்மனை சென்றான்.

மறுநாட்காலையில் வீடணன் இராவணனுடைய அரண்மனைக்குச் சென்றான். வழியில் அரக்கர் கோலாகலமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பல சிகரங்களோடு கூடிய மலைபோன்ற அரண்மனையில் வேதம் வல்ல அந்தணர் பல வேள்விகள் செய்திருந்தனர். அவன் இராவணனைக்கண்டு வணங்கி, "சீதை வந்த நாள் தொடங்கி பல தீய சகுனங்கள் தோன்றுகின்றன. தேவதைகளுக்குக் கொடுக்கும் நெய்யில் எறும்பு மொய்க்கிறது. ஆதலின் அவளை விட்டு விட வேண்டும். நான் அறியாமையாலோ பேராசையாலோ சொல்லியிருந்தாலும் இதைக் குற்றமாகத் தாங்கள் எண்ணக்கூடாது." என்று கூறினான். இராவணன், "என் முன் இராமனால் நிற்க முடியுமா?" எனக்கூறிஅவனைக் கடிந்து விடைகொடுத்தனுப்பினான்.

பின் இராவணன் பேரழகு மிக்க தேரேறி எல்லாச் செல்வங்களும் நிறைந்த தெருக்களில் வந்தான். மயனால் சிரத்தையோடு கட்டப்பெற்றதும் ஒப்பற்றதுமான சபாமண்டபத்தை அவன் அடைந்து தக்க இருக்கை எழுந்தருளினான். அவன் தனது தூதரை ஏவி அவ்வூரில் கற்று வல்ல முதியோரை அழைத்து வரக்கட்டளையிட்டான். தூதர்கள் இலங்கையில் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அரக்கா தூங்கிக் கொண்டிருக்கையிலும் விளையாடிக் கொண்டிருக்கையிலும் அவர்களுக்கு அரசகட்டளையைசொன்னார்கள். உடனே பொய் புகலாதவரும் பெருந்தன்மை யுடையவருமாகிய அரக்கர்பெரியோர் அரசசபையை அடைந்து வணங்கி ஏற்ற இருக்கைகளில் இருந்தனர். பிராமணர்கள் தர்ப்பைகளிலும் அவர்களுடைய பிள்ளை விரிப்புகளிலும் உட்கார்ந்தார்கள். வீடணனும் அங்கே வந்தான்.

இராவணன் தகுந்த பாதுகாப்பு அமைக்குமாறு சேனைத் தலைவனாகிய பிரகத்தனுக்குக் கட்டளையிட்டு சபையோரை நோக்கி "நான் இப்பேது உங்களுக்குச் சொல்லப்போகிற செய்தி முன்னரே சொல்லஎண்ணினேன். கும்பகர்ணன் தூங்கியிருந்ததால் சொல்லவில்லை. இப்போது அவன் விழித்திருக்கிறான் சிறிது காலத்தின் முன் நான் கட்டழகியாகிய சீதையைக்கொண்டு வத்திருப்பது உங்களுக்குத்தெரியும்.அவள் எனக்கு இணங்காமல் ஒரு ஆண்டுதனக்கு அவகாசம் கேட்டாள். நானும் அபபடியே கொடுத்துவிட்டேன். நாம் இராம லக்குணரைக் கொல்லவேண்டும்" எனப்புகன்றான். கும்பகர்ணன் சினம் கொண்டு, "முன் எங்களோடு ஆலோசித்துச் சீதையைத் தூக்கிவராமல் இப்போது சொல்லுகிறாய். இராமனாதியரைக் கொன்று விட்டு அவளைக்கொண்டு வந்திருக்கவேண்டும். அப்படியானால் அவள் உன்னையே விரும்புவாள். நீ தகாத செயலைச் செய்து விட்டாய். ஆனாலும் உன்பகைவரை நான் கொன்று உனக்குத் துணை செய்வேன். பின் சீதை உனக்கு வசப்படுவாள்." என்றான். அதனால் இராவணன் சினம் கொண்டதைக் கண்டு மகா பார்சனென்ற மந்திரி "தாங்கள் பலவந்தம் செய்தாவது சீதையை அனுபவிக்கவேண்டும். உங்களுக்கு என்ன அசசம்? எனக்கூறினான். இராவணன் "அமைச்சே முன் ஒரு சமயம் புஞ்சிகத்தலை என்ற அப்சரப் பெண் நான்முகனைக் காணச் சென்றாள். நான் அவளை வலுவில் கூடி ஆடையற்றவளாக்கினேன். அவள் அப்படியே நான் முகன் உலகு செல்ல அவன் சினம் கொண்டு நான் வேறு பெண்ணை அதுபோல் பலவந்தம் செய்தால் என் தலை நொறுங்குமென்று சபித்தான். நான் அதனாலேயே சீதையைப் பலவந்தம் செய்ய வில்லை என்றனன்.

அப்போது வீடணன், "சீதையைக் கொண்டுபோய்விடுவதே நலம். இராமன் உன் உயிரை வாங்காமல் விடான்." என்றான். பிரகத்தன், "நமது அரசருக்கு அப்பதர்களால் என்ன அச்சம்?" என்றான். வீடணன், "வீணுரை கூறாதே. இராமனே வாலி, கபந்தனாதியரைக்கொன்றான். இதனால் அவன் கொல்ல முடியாதவன் என்பது தெரியவில்லையா? நீங்கள் இராவணனுக்கு வேண்டியவர்கள் போலப் பேசினாலும் உண்மையில் பகைவரே. அரசருக்குச் சம்மந்தமில்லாமல் போனாலும் நாம் பலாத்காரம் செய்தாவது சீதையைக்கொண்டு போய் இராமனிடம் விடுவோம். இதுவே நலம்." என்றனன். இந்திரசித்தன் அவனைக் கடிந்து தடுத்தான். வீடணன் சினம் கொண்டு, "அடே நீ சிறுவன். இராமனைப் பணிந்தால் நாம் பிழைப்போம். அன்றேல் அழிவோம்." என்றான்.

இராவணன், இச்சொற்களைக் கேட்டவுடன் அர்ச்சுனனைப் போல் "சந்தேகம் தீர்ந்தது நீ சொல்லுகிறபடி செய்கிறேன்" என்று சொல்லாமல், "வீடணா! உடன் பிறந்தே கொல்லும் நோயே! வெளிப்பார்வைக்கு எனக்கு வேண்டியவனைப் போல காட்டி உள்ளே என்னைக் கொன்று அரசைக் கைப்பற்ற எண்ணினாய் பொறாமைக்காரனே! நீ என்னுடன் பிறந்தவனாதலின் உயிருடன் விட்டேன்" என்றனன். இதைக்கேட்ட விடணன் சினத்துடன் தன் நண்பர் நால்வருடன் புறப்பட்டான். அவன் மறுபடியும் இராவணனுக்குத் தான் முன் சொன்ன சொற்களையே சொல்லிச் சென்றான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

வீடணன் இராவணன்மேலே குற்றத்தைச் சுமத்துகிறான், சீதையை அவன் எடுத்து வந்தது குற்றமாம்! ஆனால் வீடணனுடைய தங்கையாகிய சூர்ப்பனகையை இராமனாதியோர் மூக்கையும் கொங்கைகளையும் அறுத்து அவமானம் செய்தது குற்றமில்லையாம்! சகோதரத் துரோகியாகிய வீடணன் கண்ணுக்கு பகைவனாகிய இராமன் குற்றமற்றவனாகவும் தன் அண்ணனாகிய இராவணன் குற்ற முடையவனாகவும் தானே தோற்றுவர்? இதில் வியப்பொன்றும் இல்லை! தன்னுடன் பிறந்தாளை இராமன் அவமானம் செய்ததனாலல்லவா கரன் சண்டைக்குப் போனான் என்ற நியாய உணர்ச்சி கூற அற்ற வீடணன் இராமனுடன் கரன் வலியச் சண்டைக்குப் போனான் என்று கூறுகிறான். மானங் கெட்டவன் போலும் வீடணன்! இவனைப் போற்றுவார் செயலை யாதென்பது? வீடணன் மறுநாட் காலையிலும் இராவணனையடைந்து சீதையை விட்டு விட ஏவுகிறான். பின் சபையிலும் சென்று அவன் இராவணனுக்கு விருப்பமில்லையானாலும் சீதையை வலியக்கொண்டு போய் விட்டுவிடுவோம் என்று கூறுகிறான். இதுவஞ்சகராலே இராவணனுக்கு அனுகூலமானதெனக்கூறப் பெற்றாலும் உண்மையில் இவ்விதமாகவீடணன்பேசியதெல்லாம் இராவணனுக்குப்பிடிக்காத பேச்சைப்பேசி அவனுக்குச் சினத்தை மூட்டிவிட்டு இராமனிடமுள்ள பகையை வலியுறச் செய்வதற்காகவே. வீடணன் சீதைக்கு தன் மனைவி மக்களால் வேண்டும் உதவி செய்து வந்ததோடு அனுமனுக்கும் வேண்டிப் பேசினான். இப்போதும் தன் அண்ணனுக்கு மாறான பேச்சே பேசுகிறான். எப்படியாவது சண்டை மூள வேண்டும்; பகைவனோடு சேர்ந்து இராவணனைக் கொன்று தான் முடிசூடி மன்னனாக வேண்டும் என்பதே வஞ்சகனாகிய வீடணன் கருத்து. வீடணன் பேடியாதல் வேண்டும் அல்லது வஞ்சகனாதல் வேண்டும். அவன் பேடியல்லன், வஞ்சகனே!!

இராவணன் சீதையைப் பிடித்துத் தூக்கி தன் மடியில் அவளைக் குறுகிய சிறு உடையோடு வைத்துப் போய் அவளைப் பல இடங்களுக்கும் வலிய இழுத்துப் போய்க் காட்டினான் என்பதை நாம் முன்னர் ஆராய்ந்தோம். இத்தகைய இராவணன் தன் வாயால் நான் முகன் தன்னைப் பிறமாதரை வலிய இழுத்தால் மண்டை வெடித்துப்போம் என்று சபித்தான் எனக் கூறுவனா? அத்தகைய சாபம் இருந்தால் சீதையிடம் இப்படி நடப்பானா? சீதையோடு இராவணன் கூடவில்லை என்பதை உலகத்தாருக்கு அவன் வாயினால்கூறிக்காட்ட வேண்டுமெனப் பிற்காலத்தார் கட்டியெழுதிய இடைச்செருக்கலே இது. இவ்வாறு இல்லாமல் இராவணன் சீதையோடு கூடவில்லை என்பது உண்மையாயிருப்பின் அவனைப் போலும் உத்தமனும் உளனோ?

அனுமான் இலங்கையை எரிக்கவே இல்லை; எரித்தனன் எனக் காணப்படுவதெல்லாம் பொய்யுரையே என நாம் பல பிரமாணங்களால் நிலைநிறுத்தினோம். இராவணனுடைய அரண்மனை, கொலுமண்டபம் முதலியன ஆசில் அழியாமல் அப்படியே இருக்கின்றன. தெருக்களெல்லாம் அப்படியே சிறப்பாக விளங்கின. மக்களெல்லாம் மிக அமைதியாகயாதொரு மாறுபாடும் அடையாமல் மகிழ்ச்சியோடும் வாழ்கின்றனர். இவற்றையெல்லாம் வால்மீகி விவரிக்கிறார். அழிந்த நகரத்தை புதுப்பித்ததாக எங்கும் ஒரு செய்தியும் காணப்பெறவில்லை. ஆதலின் பிற்காலத்தினரே அனுமான் இலங்கையை அழித்தனனெனப் பொய்க்கதை கட்டி அதை வால்மீகி இராமாயணத்திலும் புகுத்தி விட்டனர்! அவ்வாறு மாறுபாடு செய்த பொய்வருக்கு இராவணன் சரியாகிய தன் நகரைப் புதுப்பித்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

# வைக்கம் வீரர் வாசகசாலை ஆண்டு விழா

## எஸ். ராமநாதன் தலைவர்

## உண்மை விளக்க நிலையத்தில் தலைவர்கள் விஜயம்

## தென்மாப்பட்டில் சுயமரியாதை முழக்கம்

தென்மாப்பட்டு வைக்கம் வீரர் வாசக சாலையின் முதலாவது ஆண்டு விழா 9-3-30 பகல் 2 மணிக்குஉயர் திரு. எஸ். ராமநாதன் யம்.ஏ.பி.எல். அவர்கள் தலைமையில் நடந்தது

### தலைவர் வருகை.

உயர் திருவாளர்கள் சௌந்திரபாண்டியன் எஸ். ராமநாதன் கைவல்ய சுவாமிகள் பட்டுக்கோட்டை தண்டபாணி திருச்சி, விஸ்வநாதம் ஈரோடு ஈ. வெ. ராமசாமி முதலியவர்கள் 9 உ காலை அமராவதிப்புதூர் திரு. முருகப்பா அவர்கள் வீட்டில் இருந்து தென்மாப்பட்டு கனவான்களால் காருடன் வந்து அழைத்துச்செல்லப்பட்டார்கள்.

### நாச்சியார்புரம்.

வழியில் உள்ள நாச்சியாபுரம் என்னும் ஊரில் உள்ள உண்மை விளக்க நிலையத்தார் அவர்களால் வரவேற்று வாத்தியங்களுடன் ஊர்வலமாக அங்குள்ள ஆதிதிராவிட பாடசாலைக்கு அழைத்து செல்லப்பட்டார்கள். பிறகு அங்கு உயர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் ஈ. வெ.ராமசாமியாருக்கு ஒரு உபசாரப்பத்திரம் நிலையத்தின் சார்பாக திரு. ஜீவானந்தம் அவர்களால் வாசித்து கொடுக்கப்பட்டது திரு ஆத்மாராம் அவர்களால் திரு பாண்டியன் முதலியோர்களை வரவேற்று ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. திரு. ராமசாமியார் பதிலளித்ததும் பிள்ளைகளால்சுயமரியாதைப்பாடல்கள் பாடப்பட்டது தலைவர் பாண்டியன் அவர்கள் முடிவாக ஆதிதிராவிட பிள்ளைகள் விஷயமாக தன்னாலும் தனது போர்டினாலும் கூடிய உதவி புரிவதாகவாக்களித்தார் பிறகு பெருத்த ஜேகோஷத்துடன் எல்லோரும் தென்மாபட்டுக்குப் புறப்பட்டார்கள்.

### தேம்மாபெட்டு

வழியில் திருப்பத்தூரில் அங்கு முசாபரி பங்களாவில் யூஅயன் சேர்மென் அவர்களால் வரவேற்று எல்லோருக்கும் சாப்பாடு நடந்த பிறகு அங்கிருந்து மேற்படி கனவான்களுடன் திருவாளர்கள் சோழவந்தான் முனகால பட்டாபிராமய்யர், வெங்குசாமி அய்யா மதுரை அருணாசலம் முதலியவர்களுடன் மேளவாத்தியங்களுடன்,2மைல் தூரம் ஊர்வலமாக தெம்மாபட்டு ஆண்டுவிழா மகா நாட்டுப் பந்தலுக்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள்.

நல்ல வெய்யிலாக இருந்தும் அங்கு அது சமயம் சுமார். 3000 பேர்களுக்கு மேலாகவே ஆண்களும் பெண்களும் சரி சமமாக வந்து கூடி இருந்தார்கள். பந்தலுக்குள் இடமில்லாமல் வெய்யிலில் அநேகர் நின்று கொண்டிருந்தார்கள். சுற்றுப் பக்கம் சுமார் 10, 15 மைலிலிருந்து ஜனங்கள் மோட்டார்கார்களிலும் பஸ்களிலும் வந்து இரங்கியவண்ணமாகவே இருந்தார்கள். இவர்களில் சிவகங்கை வக்கீல் எஸ். ராமச்சந்திரன் சாத்தூர் சேர்மென் டி. எஸ். கந்தசாமி முதலியார், அருப்புக்கோட்டை சேர்மென் சுப்பிரமணிய முதலியார், அருப்புக்கோட்டை பிரபு கோபாலகிருஷ்ணசாமி நாயக்கர், சத்திரரெட்டிபட்டி மிராசுதார் சொக்கப்ப ரெட்டியார் முதலியவர்களும் திருப்பத்தூர் கண் ஆஸ்பத்திரி டாக்டர்கள் ஐரோப்பிய கனவான்களும் சீமாட்டிகளும் தாசில் திரு, மோசஸ் அவரது மனைவியார் மற்றும் திருவாளர்கள் மதுரை அருணாசலம் அருப்புக்கோட்டை கருப்பையா, சிவானந்தம், சுல்தான்பாக்தாத் ஆத்மாராம் சுவாமி மற்றும் சுற்றுப்பக்க மிராசுதாரர்கள் ஆகியவர்கள் ஏராளமாய் வந்து கூடிஇருந்தார்கள். பகல் இரண்டு மணி முதல் இரவு ஒன்பது மணி வரை ஒரே அடியாக துடர்ச்சியாக ஆண்டு விழா நடந்ததும் இவ்வளவு பேர்களும் சற்றும் அசையாமல் இருந்ததும் மிகக் குறிப்பிடத்தக்கது.

ஆண்டுவிழா சரியாய் 3 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. முதலில் நாச்சியாபுரம் மாணவர்களாலும் கம்பனூர் ஆதிதிராவிட மாணவர்கள் ஆகியவர்களால் சுயமரியாதைப் பாடல்கள் பாடப்பட்டதும் திரு. எஸ். ராமநாதன் அவர்கள் தலைவராக பிரரேபிக்கப்பட்டது. பிரகுஅவரது தலைமையில் திருவாளர்கள் பாண்டியன் ராமநாதன், ராமசாமி ஆகியவர்களுக்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன. பிரகு தென்மாபட்டு ஆதிதிராவிடர்கள்-சார்பாகவும். இருவருக்கும் இரண்டு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டதுடன் ஜனாப் அப்துல் கரீம் அவர்களால் வரவேற்பு கீதம் பாடப்பட்டது. திரு. பெ. மாணிக்கவாசகம் அவர்களால் பார்ப்பனக் கொடுமைப் பாடல்கள் பாடப்பட்டது. பிரகு தலைவர் ராமநாதன் அவர்கள் முகவுரைப் பிரசங்கம் செய்தார்

### அறிக்கைப் பத்திரம்.

காரியதரிசி திரு. முத்துராமன் அவர்களால் அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டது; அதில் அவ்வாசகசாலையில் 70 அங்கத்தினர்கள் இருப்பதாயும் வாசகசாலைக்கு சராசரி மாதம் 500 பேர்கள் வீதம் வந்து புஸ்தகம் பத்திரிகை முதலியவைகள் படிப்பதாகவும்,

இவ்வாசகசாலை ஆதரவில் செய்த பிரசாரங்களால் திதி கொடுத்தல் முதலிய பல மூட நம்பிக்கைச் சடங்குகள் நின்று விட்டதாகவும்,

ஆரம்ப பாடசாலைக்கு 575 ரூ வசூல் செய்து இடம் வாங்கி இருப்பதாகவும் சங்கத்தில் அங்கம் பெறாத ஆதிதிராவிடர்களுக்கும் அவர்களைச் சமமாய் நடத்தி அவர்களுக்கும் புஸ்தகம் பத்திரிகை முதலியவை இலவசமாய் படிக்கச் செய்திருப்பதாகவும் வாசகசாலைக்கு குடி அரசு திராவிடன் குமரன் நாடார்குலமித்திரன் முன்னேற்றம் சுயமரியாதைத் தொண்டன் முதலிய பல பத்திரிகைகள் வருவதாகவும் ஞானசூரியன் இராமாயண ஆபாசம் முதலாகிய 225 புத்தகங்கள் புத்தக சாலையில் இருப்பதாகவும் திருவாளர்கள் பிச்சப்பா சுப்பிரமணியம், கண்ணப்பர் மரகதவல்லி முருகப்பா சிவானந்தன் பொன்னப்பலம் கருப்பையா அருணாசலம் சீவானந்தன சிவகெங்கை எஸ் ராமச்சந்திரன் பொன்னுசாமி. வேதமாணிக்கம் அழகிரிசாமி துங்கன் சொக்கணடி முதலிய பல அறிஞர்களால் சுயமரியாதை இயக்க உபந்நியாசங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் மற்றும் அநேக காரியங்கள் செய்ய வேண்டியதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் கண்டிருந்ததுடன் நன்குடையும் சந்தாவுமாக ஒருவருஷத்தில் 1430 ரூபாய் வசூலித்திருப்பதாகவும் செலவு போக மீதி 640 ரூபாயகை வசமிருப்பதாகவும் கண்டிருந்தது

### தலைவர்கள் பிரசங்கம்.

பிறகுதிரு.சௌந்திரபாண்டியன் அவர்கள் உபசாரப்பத்திரத்திற்கு பதிலளிக்கும்முறையில் சுயமரியாதை இயக்கம் என்பது பற்றி ஒருசொற்பொழிவாற்றினார் பிறகு திரு திருச்சி விஸ்வநாதம் முன்னேற்றம் என்பது பற்றியும் சோழவந்தான் திரு பட்டாபிராமய்யர் பெண்கள் விடுதலை என்பது பற்றியும் திரு ஈ வெ ராமசாமி நமதுநாட்டின் இழிநிலைக்குக் காரணம்? என்பது பற்றியும் இளங்கோ என்னும் சிறுவன் சுயமரியாதை என்பது பற்றியும். சிவகெங்கை எஸ். ராமச்சந்திரன் தீண்டாமை என்பது பற்றியும் சாத்தூர் சேர்மன் கந்தசாமி முதலியார் ஜாதி என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள் பிறகு புகைப்படம் எடுக்கப்பட்டுபிறகு நாச்சியாபுரமஉண்மை விளக்க நிலைய மாணாக்கர்களும் மருதங்குடி ஆதிதிராவிட பள்ளிக்கூட மாணாக்கர்களும் தீண்டாமை வழக்கு என்னும் நாடகத்தை நாடக ரூபமாக நடத்திக்காட்டினார்கள். சிவகெங்கை ஆதிதிராவிட பள்ளிக்கூட மாணவிகள் சுயமரியாதைப் பாடல்கள் பாடினார்கள் பிறகு திரு. ஈ.வெ.ராமசாமியாரால் சுயமரியாதைப் பாட்டுப்பாடிய திறமையைப் பாராட்டி உ. வி நிலைய மாணவன் திரு. ஆறுமுகத்துக்கும், சிவகங்கை ஆதித்தமிழர் கைத்தொழிற் கல்வி நிலைய மாணவி லெட்சுமிக்கும், நாடகத்திறமையைப் பாராட்டி மருதங்குடி ஆதித்திராவிடப் பள்ளிக்கூட மாணவி அழகம்மாளுக்கும் வைக்கம் வீரர் வாசக சாலையார் சார்பாக பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் வெள்ளி மெடல்களளித்து நல்லுரை வழங்கினார். நடிக்கப்பட்ட நாடகம், சொற்பொழிவுகளை விடச் சிறந்த நலம் பயக்கத்தக்க தென்றும், இத்துறையில் நிலையத்தார் செய்த முயற்சி போற்றத்தக்க தென்றும், இந்நாடகத்தை பல ஊர்களிலும், தமிழ் நாடு முற்றும் நடித்து மக்களுக்கு உணர்ச்சியூட்ட வேண்டுமென்றும், அது மற்ற நாடகங்களைப் போல கட்டுக் கதைகளை ரூபிக்காது தினமும் நடக்கும் உண்மை நிகழ்ச்சிகளையே ரூபித்துக் காட்டுகின்றதென்றும் கூறி மேற்படி மாணவ மாணவிகளை ஈரோட்டு மகாநாட்டுக்கு வரும்படி அழைத்தார். பிரகு தலைவர்முடியாசகர்களுக்கும் நன்றி கூறி கூட்வுரையானதும் தலைவருக்கும் உபசரிடம் இரவு 9 மணிகது நிறைவேறிற்று. பிறகு திரு. மருதப்பா அவர்கள் வீட்டில் பெரிய சமபந்திவிருந்துகளும் நடந்தது.

---


மகா-ா-ா-ஸ்ரீ ஈரோடு டி. மு. கோர்ட்டு

1924 ௵ O. S. No. 103

1929 ௵ E. P. R. No. 1759

1930 ௵ E. A. No. 308

குமு. கரு. கரு. ராமநாதஞ் செட்டியார் by Partner லெட்சுமணஞ் செட்டியார் } வாதி

ஈரோடு தாலூகா புஞ்சைப் பாலத்தொழுவு கிராமம் காசிபாளையத்தி லிருக்கும் ராக்கியா கவுண்டன் மகன் மாஜிமணியம்சின்னுசாமிக் கவுண்டன் } பிரதிவாதி

மேற்படி நிறைவேற்று மனுவில் பிரதிவாதியின் ஸ்தாவர சொத்துக்களை ஏலத்துக்குக் கொண்டுவர மனுக்கொடுத்து ஏல நோட்டீசு வாய்தா 26—3—30 ல் போடப்பட்டிருப்பதால் மேற்படி தேதியில பிரதிவாதிக்குள்ள ஆக்ஷேபனையை தெரிவித்துக் கொள்ளாவிட்டால் ஒரு கட்சியாய் முடிவு செய்யப்படும்.

ஈரோடு, 12-3-30. E. S. தெண்டபாணி ஐயர், வாதி வக்கீல்

# ஒப்பாரி வீரம்.

சர்தார் படேல் சிறை புகுந்துவிட்டார். படேல் சிறை புகுந்தது தமது முதல் வெற்றியென்று திரு. காந்தியும் ஒப்புக்கொண்டு விட்டார். 12-ந் தேதி படை யெடுக்க திரு. காந்தி முயற்சி செய்யவும் தொடங்கிவிட்டார். அவரை ஆதரிப்பவர்களெல்லாம் அவரைப் பின் தொடரவும் துணிந்து விட்டார்கள். சென்னை தேசிய வாதிகள் காற்று நுழையா மூலை தேடிப் பதுங்கிக் கொண்டனர். தேசீயப் பத்திரிகைகளோசோக ரஸமும், விநோத ரஸமும்பொருந்திய ஒப்பாரிகளால் தமது வீராவேசத்தை வெளியிடுகின்றன. நமது கௌரவ சஹஜீவி "இந்து," சர்தார் படேல் கைதுசெய்யப்பட்டதும், தண்டிக்கப்பட்டதும் சட்டத்துக்கு முரணான செயலென்று கண்டிக்கின்றது. சட்ட மறுப்புப் போர் வீரர் விஷயத்தில் சட்டசம்பந்தமான விவாதங்களைக் கிளப்புவது அனுவசியமென்றே தோன்றுகிறது. உப்புவரியை மறுப்பதினாலும் உபபு உண்டு பண்ணுவதினாலும் இந்திய சர்க்காரைக் கவிழ்த்து விடலாமென்றோ திரு. காந்தியோ அவரது சீஷர்களோ நம்ப வில்லை. சர்க்கார் தம்மைச் சிறைப்படுத்துவதற்கு ஏதேனும் ஒரு காரணம் உண்டு பண்ண வேண்டுமென்பதே அவர்களது தலைமையான நோக்கம். எனவே, சிறைப்படுத்தியது நியாயமானதா என்று அவர்கள் ஆராயத் தொடங்க மாட்டார்கள். இறக்கத் துணிந்தவன் நஞ்சுண்டு இறப்பது சிலாக்கியமா? நீரில் மூழ்கி இறப்பது சிலாக்கியமா துப்பாக்கிக் குண்டால் சாவது சிலாக்கியமா என்று சிந்தனை செய்வானா? சந்தர்ப்பத்துக்கு சௌகரியமான முறையில் அவன் உயிர்விடுவான். ஆகவே படேல் சிறைபுகுந்தது சட்டசம்மதமானதா அல்லவா என்ற விவாதம் அநாவசியமென்றே எண்ணுகிறோம்.

அப்பால் திரு. காந்தி உப்புவரியை மறுப்பாரா? மாட்டாரா? என்று காத்திருந்து பார்க்க சர்க்காருக்கு பொறுமையில்லாது போனதைப் பற்றி 'இந்து' கண்ணீர் விடுகிறது. திருவாளர் காந்தி, மைலாப்பூர் கோஷ்டியாரைப் போல் வெறும் வாய் வீச்சு வீரர் அல்ல என்பதையும் சொல்லிய வண்ணம் செய்தே தீருவார் என்பதையும், வீண் மிரட்டலுக்காக கூச்சல் போட மாட்டாரென்பதையும் அவரது அரசியல் எதிரிகளும் கூட ஒப்புக்கொள்வார்கள். எனவே திரு. காந்தி உப்பு வரியை மறுப்பதைப் பற்றி சர்க்கார் சந்தேகம் கொள்ளவோ, காத்திருக்கவோ காரணமில்லை. படேல் களப்பலியைப்பற்றி ஏதேனும் கூறியாக வேண்டுமென்ற பத்திரிகை சம்பிரதாயத்துக்காக இந்து சந்தர்ப்பத்துக்குத் தேவையில்லாத ஆட்சேபனைகளைக் கூறுகிறதென்றே எண்ணுகிறோம். சுதேசமித்திரனும் தமது தோழப் பத்திரிகையான 'இந்துவின்' சம்பிரதாயத்தையே பின்பற்றுகிறது. ஆனால், தன் சொந்த அபிப்பிராயத்தை மறைக்க அது வெகு சிரமப்படுகின்றது. திரு. காந்தியார் இறுதிக் கடிதத்தின் நீளம், அகலம், சொல் நயம், பொருள் நயம் முதலியவைகளை வெகு அழகாக வர்ணித்து வைஸ்ராய் செவியையும் நோகாமல் பிடித்துக் கிள்ளி, தனது கடமையைப் பூர்த்தி செய்து விட்டது.

ஆனால், நமது "பிராட்வே" சகஜீவி "தமிழ் நாடு" வோ வீராவேசம் கொண்டு துள்ளிக் குதிக்கின்றது. "எச்சரிக்கை! எச்சரிக்கை!! என சர்க்காரை அச்சுறுத்துகின்றது. வீராவேசத்தினால் "தமிழ் நாடு" வுக்கு அறிவும் பார்வையும் மயங்கி இருந்தாலும் "பூரண சுயராஜ்யம், உகவி, மறுப்பு, அகிம்சை என்ற காந்தி தர்மத்தில் நாம் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருந்த போதிலும்" என ஒரு பீடிகை போட்டு முன்னணை கட்டிக்கொள்ள "தமிழ்-நாடு" மறந்து விடவில்லை. "ஆரியக்கூத்தாடினாலும் காரியத்திலே கண்" என்ற பழமொழியை "தமிழ் நாடு" செவ்வையாக உணர்ந்திருக்கிறது. "பிரிட்டிஷ் சர்க்காருக்கு யானை பலமிருந்தாலும் பூனைபோல் நடந்து கொண்டாலன்றி மானம் கெட்டுப்போகுமென்பதை லார்டு இர்வின் அறிந்திருக்க வேண்டு" மென்று "தமிழ் நாடு" பயமுறுத்துகிறது

இரண்டு வாரங்களுக்கு முன் "காந்தி கோஷ்டியார் உப்பு வரியை எதிர்த்தால் எந்த சர்க்காரும் அவர்களைக் கைது செய்யாமலிருக்க முடியாது" என்று சட்ட வாதம் செய்த "தமிழ் நாடு" இப்பொழுது ஒப்பாரி வைக்கக்காரணம் என்ன? "லாகூர் தீர்மானங்களையும் காந்தி தர்மங்களையும் நாம் ஆதரிக்கவில்லை" என்று சதா புலம்பிக்கொண்டிருக்கும் தமிழ் நாடு பாமர மக்களை ஏய்ப்பதற்காக இவ்வாறு வெத்து வெடிகள் வைப்பதை யார் மதிக்கப்போகிறார்கள்.?

அய்யங்கார் கோஷ்டியார் சிறை புகப் பயந்து காங்கிரஸ் பதவிகளை ராஜிநாமாச் செய்து ஓட்டம்பிடிக்கிறார்கள் என்று குறை கூறும் "தமிழ் நாடு" தன் மானேஜிங் டைரக்டர் திரு. வரதராஜுலு என்ன செய்தார் என்பதை அறியவில்லையா? அய்யங்கார் கோஷ்டியார் சட்ட மறுப்புப் போர் பேச்சு வலுத்ததும ராஜிநாமா செய்தார்கள். திரு. நாயுடு அரசியல் சூழ்ச்சிகளில் தேர்ச்சி பெற்றவராகையால், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னாடியே ராஜிநாமாசெய்தார். அய்யங்கார் கோஷ்டியாரும், திரு. நாயுடுவும், ராஜிநாமா செய்ததில், கால அளவில் சிறிது ஏற்றத் தாழ்வு ஏற்பட்டது வாஸ்தவமே ஆனாலும் அதனால் திரு. நாயுடு மட்டும் வீரர் என்றோ அய்யங்கார் கோஷ்டியார் கோழைகள் என்றோ ஏற்பட்டு விடாது. ராஜிநாமா விஷயத்தில் அய்யங்கார் கோஷ்டியார் குப்பான்களைப்போல் நடந்துகொண்டதையும் திரு. நாயுடு மிக தந்திரமாக நடந்துகொண்டதையும் நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், அய்யங்கார் கோஷ்டியாரைவிட திரு. நாயுடு வீரர் என்றோ தேசபக்தர் என்றோ பொக்கம் பேச நாம் சம்மதிக்க மாட்டோம். உலகமும் சம்மதியாது. தமிழ் நாட்டார் இந்த இரகசியங்களை அறியமுடியாதவாறு மூடர்கள் என்று தமிழ்நாடு நம்புவதும் சரியல்ல.

இன்னுமொரு விஷயம். பூரண சுயேச்சைத் தீர்மானத்தையும் சட்ட சபை பகிஷ்காரத்தையும் ஆதரியாத "சுயராஜ்யா" ஆசிரியர் திரு. டி. பிரகாசம், ஆந்திர தேசத்தில் சட்ட மறுப்புப் போருக்குத் தலைமை வகிப்பதாக ஒப்புக்கொண்டு விட்டார். தமிழ்நாட்டில் சட்ட மறுப்புப் போருக்கும் தலைமை வகிக்கத் தக்க தலைவர்களைக் காணவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் திரு. ராஜகோபாலாச்சாரியை சட்ட மறுப்பு சர்வாதிகாரியாக்கினாலும் அவருக்கு சர்தார் படேல் ஸ்தானத்தை நிரப்பும் தேவை ஏற்பட்டிருக்கிறது.

எனவே "தென்னாட்டுதிலகரான" திரு நாயுடு தென்னாட்டில் சட்ட மறுப்புத்தலைவராகி உப்பு வரியை மறுக்கத் தயார் தானா? தமதுதேசீயத்தின் மாத்தையும் உரையையும் விளக்கிக்காட்ட திரு நாயுடுவுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். தைரியமிருந்தால் முன் வரட்டும்! இல்லையானால் நல்ல மூலைதேடி முக்காடிட்டுப் படுத்துக் கொள்ளட்டும். "ஆஸ்த்மா" அடிக்கடி தொந்தரவு செய்வதினால் டாக்டர் அபிப்பிராயப்படி ஓய்வெடுப்பதாக தமது தினசரியில் தினந்தோறும் ஒரு "புல்லட்டின்" வெளி இட்டுக்கொண்டுஇந்த சட்டமறுப்புத் தண்டா நீங்குமட்டும் ஓய் வெடுத்துக் கொள்ளட்டும். வீணே வாய்வீரம் மட்டும் பேசக்கூடாது. பத்திரிகையில் மட்டும் "சர்க்காருக்கு எச்சரிக்கை" என்று எழுதிவிட்டால் "டாக்டரை வீரரென்று ஒருவரும் மதித்து விடமாட்டார்கள்.

படேல் களப்பலி ஒப்பாரியிலும் கூட சாப்ரூ மகாநாட்டை "தமிழ் நாடு" மறந்து விடவில்லை.

"சர் சாப்ரூவையும், சர். பாத்ரோவையும் நம்பி லண்டனில் மகாநாடு கூட்டுவதில் யாதொரு பயனும் உண்டாகாது. டில்லியில் சென்ற வாரம் கூடிய சர்வகட்சித் தலைவர்களுக்கு தலையுமில்லை; காலுமில்லை யெனபதே நமது அபிப்பிராயம் லண்டன் மகாநாட்டைக்கூட்டாமல் நழுவ விடுவதே நல்லது. நடத்தியே தீர வேண்டுமென்றிருந்தால் திரு. காந்தியுடன் சமரசம் ஏற்படுத்த முடியாவிட்டால் தேசிய வாதிகளைக் கொண்டே மேற்படி மகாநாடு நடத்துவது சிறந்த முறையாகு மென்பதை சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்." என்று "தமிழ்நாடு புலம்புகிறது.

திரு. காந்தியும் காங்கிரஸ் பிரதிநிதிகளும் பங்கு கொள்ளாத மகாநாடு பயனற்றதென்று "தமிழ்நாடு" முன் கூறிற்று. இப்பொழுது நடத்தியே தீரவேண்டுமானால் தேசிய வாதிகளைக் கொண்டு நடத்த வேண்டுமென்று கூறுகிறது.

'தேசியவாதிகள், தேசீயவாதிகள்' என்று தமிழ்நாடு புலம்பிக் கொண்டிருப்பதின் ரகசியம் என்ன என்பது விளங்கவில்லை. மின்சார நாயுடு அரசியல் அகராதிப்படி சா பாத்ரோவும் சர் சாப்ரூவும் தேசிய வாதிகள் அல்லாவிட்டாலும் பண்டித மாளவியா, கெல்கர், டாக்டர் மூஞ்சே, திரு. ஜெயகர், திரு. ஜின்னா, திரு. யாகூப் ஹஸன். மௌலானா முகமதலி முதலியோர் தேசிய வாதிகள் ஆகார்களா? ஆகார்களானால் அவர்கள் என்னவாதிகள்? ரஸவாதிகளா? பிரதிவாதிகளா? இம்மாதிரி தலையைச்சுற்றி மூக்கைத் தொடுவதைவிட "நான் தேசிய வாதி, சென்னை தேசியக்கட்சித் தலைவன், இரண்டு முறை சிறை சென்றிருக்கிறேன். தென்னாட்டுத் திலகரெனப் பட்டம் பெற்றிருக்கிறேன்" என ஒரு விண்ணப்பம் எழுதி சர். சாப்ரூவுக்கு "டாக்டர்" நாயுடு அனுப்பித் தொலைப்பதல்லவா நல்லது? பத்திரிகைப் பேட்டிகள் மூலமும் மற்றும் விளம்பரங்கள் மூலமும் "டாக்டர்" நாயுடு தமது தலைமைத் தன்மையை பலமுறை விளக்கியதை ஒரு கால் சர். சாப்ரூ அறியாதிருந்திருக்கலாம் புத்தீசல்கள் போல் தலைவர்கள் தோன்றித் தாண்டவமாடும் இக்காலத்தில் 5 அடிஉயரமுள்ள "டாக்டர்" நாயுடுகாரை யார் கவனிக்கப்போகிறார்கள்?

"டில்லியில் சென்ற வாரம் கூடிய சர்வகட்சித்தலைவர்களுக்கு தலையுமில்லை காலுமில்லை" என்று கூறமானங்கெட்ட "தமிழ்நாடு" துணிவுகொண்டது தான் ஆச்சரியமாகஇருக்கிறது.

"டாக்டரின்" தேசீயக்கட்சியில் எத்தனை மெம்பர்கள் இருக்கிறார்கள்? ஒரு டஜன் மெம்பர்களை சேர்க்கமுடியாத "டாக்டருக்கு" கட்சித்தலைவர் என்று கூறிக்கொள்ள உரிமையுண்டானால் சர். சாப்ரூவுக்கும், சர் பாத்ரோவுக்கு மட்டும் ஏன் உரிமையில்லை?

சர். பாத்ரோ ஒரு அரசியல்கட்சித் தலைவர் என்பதை காங்கிரஸ்காரரும் கூட ஒப்புக்கொண்டிருக்கிறாகள். அன்றியும் ஒருஅரசியல் கட்சி சார்பாக 6 வருஷ காலம் ஒரு மாகாண நிருவாகம் நடத்திய பெருமையும் சர். பாத்ரோவுக்கு உண்டு. சர். சாப்ரூவும் பழமையான மிதவாதக்கட்சியாரில் தலை சிறந்தவர். வைஸ்ராயின் நிருவாக சபை மெம்பராயிருந்து அனுபவம் பெற்றவர். ஆனால், இவ்விருவர்களும் "மின்சாரரஸம்" கண்டுபிடிக்கவில்லையென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம்.

"மின்சார ரஸ" கர்த்தர்களுக்கு மட்டுமே தேசிய வாதியென கூறிக்கொள்ள உரிமை யுண்டென்று "டாக்டர்" நாயுடு சொல்வாரானால், அந்த கௌரவ "தேசியவாதி" பட்டத்தை இந்தியாவில ஒருவரும் சூட்டிக் கொள்ளக் கூடாதென்று தீவிரமாகப் பிரசாரம் செய்ய நாம் தயாராயிருக்கிறோம்.

"திராவிடன்"

"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"

குடி அரசு

ஈரோடு 1930 மார்ச்சு மீ 16-உ

# காந்திப் போர்

இந்தியாவில் இப்போது எங்கும் பார்த்தாலும் பேசிக் கொண்டிருக்கும்படியானதும் ஏதோ ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டு பண்ணப்போகின்றது என்று பாமர மக்களுக்குள் பிரமாதமாகப் பிரசாரம் செய்யப்படுவதற்கு உபயோகித்துக் கொண்டிருப்பதும், திரு. "காந்தியின் கடைசிப் போர்" என்று சொல்லப்படும் சத்தியாக்கிரக சட்டமறுப்பு கிளர்ச்சியேயாகும். இந்த சத்தியாக்கிரக சட்ட மறுப்பு என்பதை உப்புக் காச்சுவதன் மூலமும் உப்பளத்தில் இருந்து உப்பை அள்ளிக் கொண்டு போவதன் மூலமும் செய்து பார்ப்பதாக சொல்லிக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இம்மாதிரி திரு. காந்தியவர்கள் செய்வது இந்தியாவில் இது இரண்டாவது தடவையாகும். அதாவது இது போலவே 1920 21 ம் வருஷத்தில் ஒரு தடவை பஞ்சாப் அநீதியை சொல்லிக் கொண்டு மதுபானத்தின் பேரால் ஒரு கோடி ரூபாய் கைமுதலாக வைத்து கள்ளுக்கடை மறியல் மூலமாய் ஒரு சட்டமறுப்பும் சத்தியாக்கிரகமும் தொடங்கப்பட்டு சுமார் நாலு மாத காலம் வெகு மும்மரமாய் நடந்தது. அதனால் சுமார் 20, 30 ஆயிரம் பேர்கள் வரை சிறை சென்று சிறைவாசமும் செய்தார்கள். அப்படி இருக்கையில் திடீரென்று அந்தச் சட்ட மீருப்பு நிருத்தப்பட்டது. திரு காந்தியும் அது சமயம் ஒரு பார்ப்பனரின் சூட்சியால் சிறையிலடைபட நேர்ந்தது. பிறகு படித்த கூட்டத்தாரால் அவ்வியக்கத்தையும் அவ்வுணர்ச்சிகளையும் அடியோடு நசுக்கப்பட்டுவிட்டது. இதையாவரும் அறிவார்கள். அது முதல் கொண்டு திருகாந்தியார் விடுதலையாகி வெளியில் வந்து இந்த 5, 6, வருஷகாலமாய் அவருக்கு இன்னது தான்செய்வது என்று தோன்றாமல் கதரின் பெயரைச்சொல்லி ஏராளமாக பணம்வசூலித்து அந்த பணத்தினால் தன்னுடன் கூட இருக்கும் சிஷ்யர்களையும் செலவாக்குகளையும் கொண்டு அரசியல் புரட்டர்களின் இஷ்டப்படி யெல்லாம் அரசியல் இயக்கத்தை அவர்களுக்கு இணங்க செய்துகொடுத்துக் கொண்டு அரசியலில் தனக்கென ஒரு கொள்கையும் இல்லாமல் சமயத்திற்குத்தகுந்தபடி யெல்லாம் பேசியும் நடந்தும் கொண்டுவந்தார். இதனாலேயே மனப்பூர்வமாய் அவரிடம் பக்தி கொண்டு சுயநலமில்லாமல் உழைத்து வந்தவர்கள் பலர் அவரைவிட்டு நீங்கினார்கள். இவைகளைப்பற்றி விவர விவரமாக நாம் அவ்வப்போது தெரிவித்து வந்திருக்கின்றோமாதலால் இப்போது அவைகளை விவரிக்கவில்லை.

## நமது நிலை.

நிற்க நம்மைப்பொருத்தவரை அக்காலத்தில் திருகாந்தியிடம் நமக்கு இருந்த பக்தியும் கண்மூடித்தனமாய் குடும்ப சகிதமாய் அவரைப் பின் பற்றி வந்த தன்மையும் பிறருக்கு விளக்கிக் காட்டித்தான் தெரியச்செய்ய வேண்டியிருக்குமென்று நாம் நினைக்கவில்லை.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் 1922 ௵ம் சத்தியாக்கிரகம் மும்முரமாய் நடக்கும் போது பம்பாயில் சர் சங்கரன் நாயர் தலைமையில் கூட்டப்பட்ட வட்ட மேஜை (ரவுண்டேபிள்) மகாநாட்டின் போது திரு காந்தியவர்கள் பேசிய பேச்சிலிருந்தே நமது விஷயத்தை அறிந்துகொள்ளலாம்.

அதாவது "சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதென்றால் அது என்னுடைய கையில் இல்லை, ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்மணிகளைக் கேட்டுச் செய்யவேண்டிய காரியமாகும்" என்பதாக சொல்லி இருக்கிறார். மற்றும் அந்த சத்தியாக்கிரகத்திலும் சட்டமறுப்பிலும் நமக்கு இருந்த நம்பிக்கைகளைப்பற்றியும் அதில் நமக்கிருந்த துணிவுகளைப்பற்றியும் நாம் வாசகர்களுக்கு விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை என்றே கருதுகின்றோம். அதையும் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் சர்க்காரின் அடக்குமுறைக்கு நாம் ஆளாகவேண்டியிருந்த அய்ந்து முக்கிய சந்தர்ப்பங்களிலும் வீடு சோதனை போடப்பட்ட பல சமயங்களிலும் மற்றும் 10 ௵ 20 ௵ம் தண்டிக்கக்கூடிய வழக்குகளிலும் நாம் எதிர் வழக்காட அடியோடு மறுத்துவிட்டதன் மூலமும் பல தடவை சிறை சென்றதன் மூலமும் "தண்டிப்பதால் இவன் பயப்பட மாட்டான்" என்று கருதி இரண்டொரு தடவை சர்க்காரரே நம்மீது கொண்டு வந்த வழக்குகளை திருப்பி வாப்பீஸ் வாங்கிக் கொண்டதன் மூலமும் நன்றாய் உணரலாம். கடைசியாக சொல்ல வேண்டுமானால் தமிழ் நாடு முழுமைக்கும் ஈரோட்டில் போடப்பட்ட 144 வது பிரிவு உத்திரவு மாத்திரம் தான் 50, 60 பேர்கள் கைதியான பின் ஆயிரக்கணக்கான மக்கள் சட்டத்தை மீறினதால் செல்லுபடி அற்றதாகிற்று. அதாவது அந்த உத்திரவு மீறினவர்களை சர்க்கார் அரஸ்ட் செய்யாமல் விட்டுவிட்டார்கள். ஆகவே இவ்வளவு தூரம் நாம்கண்மூடித்தனமாய் திரு காந்தியை பின்பற்றியதும் எதற்கும் தயாராய் இருந்து கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கத் துணிந்ததும் எதற்காக என்பதை இந்த சமயம் வாசகர்கள் சற்று கவனித்துப்பார்க்கவேண்டும். இதன் மூலம் நாம் ஏதாவது உத்தியோகத்தையோ பெருமையையோ வரும்படியையோ வயிற்றுப் பிழைப்பையோ அல்லது ஏதாவது ஒரு விதமாய் இதன் பேரால் வாழலாம் என்றோ உத்தேசித்து இதில் இறங்கினோமா? அல்லது தேசத்தின் நன்மையையும் கஷ்டப்படும் மக்களின் பரிதாபத்தை ஒழிப்பதையும் எதிர்பார்த்து இறங்கினோமா? என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சாதாரணமாக நாம் இத் தொண்டில் ஈடுபடும் போது ஈரோட்டில் உள்ள பிரபல வியாபாரிகளில் ஒருவனாகவும் முனிசிபல் சேர்மனாகவும் தாலூக்கா ஜில்லா போர்டுகளில் குறிப்பான அங்கத்தினராகவும் தேவஸ்தானக்கமிட்டி ப்ரசிடெண்டாகவும் மற்றும் ஜில்லாவில் உள்ள பொது ஸ்தாபனங்களில் எல்லாம் அனேகமாய் ஒவ்வொன்றிலும் தலைவனாகவும் அல்லது காரியதரிசியாகவும் அல்லது நிர்வாக மெம்பராகவும் இருந்து வந்தோம். இந்நிலையில் இருக்கும் போது தான் திரு. சி. ராஜகோபாலாச்சாரியாருடையவும் திரு வரதராஜுலுவுடையவும் நட்பினால் அவ்வேலைகளை திடீரென்று ராஜிநாமா கொடுத்துவிட்டு சென்னைக்குச் சென்றோம். இது இப்போதைய நமது நண்பர்களுக்கும் எதிரிகளுக்கும் நன்றாய் தெரிந்த விஷயமாகும். ஆகவே நாம் இந்த சேவையில் இறங்கினது ஜீவனத்தையோ உத்தியோகத்தையோ பெருமையையோ வயிற்றுப் பிழைப்பையோ வாழ்க்கையையோ உத்தேசித்து இறங்கினோமா அல்லது உண்மையில் இறங்கினோமா? என்பதை யோசித்து முடிவு செய்து கொள்ள வாசகர்களுக்கே விட்டு விடுகின்றோம்.

## இதை ஏன் சொல்லுகிறோம்.

நிற்க நாம் ஏன் இதை இப்போது சொல்ல வந்தோமென்றால் "தேசத்தில் இது சமயம் நடக்கும் இவ்வளவு தீவிரக் கிளர்ச்சியில் மகாத்மா முதல் அனேக தேசபக்தர்கள் ஜெயிலுக்கு போய்க் கொண்டிருக்கையில் நீ இதில் சேராமல் இருப்பது சரியா" என்று நமக்கே பல நண்பர்கள் எழுதியிருப்பதாலும் மற்றும் சர்க்காருடையவோ அல்லது மந்திரிகளுடையவோ ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்களுடையவோ தயவில் நாம் ஏதோ சுயநலம் கருதி சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு வகுப்பு பூசல்களைக்கிளப்பிவிட்டு தேசநன்மைக்கு இடையூறு செய்வதாக சிலர் விஷமப் பிரசாரம் செய்வதாக தெரிய வருவதாலும் அவைகளுக்கு சமாதானம் சொல்ல இவற்றை முதலில் எழுதிவிட வேண்டியதாகின்றது. ஏனெனில் பொது ஜனங்கள் என்பவர்கள் பெரிதும் நமது நாட்டில் பாமரமக்களாகவே இருக்கின்றார்கள். இன்னமும் நல்லது கெட்டது இன்னது என்று அறிய முடியாத நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். (ஏனெனில் 100 க்கு 10 பேருக்குத்தான் கையெழுத்து போடத்தெரியும்) ஆதலால் இவைகள் சில சமயங்களில் நமது இஷ்டத்திற்கு விரோதமாகவே சொல்லவேண்டியதாகிவிடுகின்றது. அன்றியும் நாம் கீழே சொல்லப்போகும் விஷயங்களுக்கும் இவைகளை முதலில் சொல்லி விட்டால் தான் வாசகர்கள் ஏமாறாமல் உண்மையை உணரக் கூடும் என்றும் கருதியே சொன்னோம்.

## போரில் நம்பிக்கை இல்லை.

நிற்க, முதலாவதாக காந்திப் போர் என்பதில் நமக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை. அதாவது முதலாவது இதன் கொள்கைகளிடமும் நடத்துகின்ற தலைவர்களின் சொந்த கொள்கைகளிடமும் சில தலைவர்களின் நல்ல எண்ணத்தினிடமும் நமக்கு நம்பிக்கை இல்லை. ஏனெனில் இவர்கள் தேசத்தை விட தேச மக்களை விடத்தங்களின் நிலையையும் தங்களின்

அந்தஸ்த்தையும் கவுரவத்தையும் பிரதானமாய் கருதி இருப்பவர்களும் சிலர் தங்கள் மதத்தின் ஆதிக்கத்தையும் வருணாச்சிரம தர்ம ஆதிக்கத்தையும் தங்கள் வகுப்பின் ஆதிக்கத்தையும்சிலர் பிரதானமாய்க் கருதி இருப்பவர்களுமாய் இருக்கின்றார்கள் என்று நாம் நினைக்கின்றோம். அன்றியும் இந்தியாவின் இன்றைய நிலைக்கு பூரணசுயேச்சை வேண்டுமானால்—விடுதலை வேண்டுமானால்—சுயராஜ்யம் என்பது வேண்டுமானால்—வெள்ளைக்காரர் சுயநல ஆட்சி ஒழியவேண்டுமானால் முதலில் மத ஆதிக்கமும் அதனகுருட்டு நம்பிக்கைகளும ஒழிய வேண்டும். தீண்டாமை ஒழிய வேண்டும். பெண்கள் கட்டுப்பாடு ஒழியவேண்டும். ஜாதி ஒழியவேண்டும். பார்ப்பனர் ஆதிக்கம அடியோடு ஒழிய வேண்டும் முதலாளித் தன்மை ஒழியவேண்டும். இவ்வளவும் நடந்த பிறகுதான் வெள்ளைக்கார கொடுங்கோன்மை (தானாய் ஒழிந்துவிடும். அல்லது) நம்மால் ஒழிக்கப்படவேண்டும். ஒழிக்கப்படவும் முடியும் என்பது நமதுமுடிவு.

அப்படிக்கில்லாமல் இப்போது வெள்ளைக்கார ஆட்சியைப்பற்றியோ இந்தியாவின் சரித்திரத்தைப் பற்றியோ பேசுவதென்பது வெறும் (ஹம்பக்) மோசடி அல்லது மடமையான காரியமாகும் என்பதுதான் நமது முடிவு. ஏனெனில்,

## இந்தியா சரித்திரம்

இந்தியாவானது நமதுபுத்திக்கும் மனதிற்கும் எட்டக்கூடிய காலத்திலிருந்து ஒரு நாளாவது யோக்கியமான அரசாட்சியில் இருந்ததாக இதுவரை எந்த சரித்திரத்திலிருந்தும் அறியக் கூடவேயில்லை: பாரத ராமாயண காலம் என்று சொல்லப்பட்ட கால ஆட்சியும் சேர சோழ பாண்டிய காலம் என்று சொல்லப்பட்ட கால ஆட்சியும் மகமதியர், நாயுடு, மராட்டியர் ஆகியவர்கள் காலம் என்று சொல்லப்பட்ட கால ஆட்சியும் ஆகிய இவைகளில் எதை எடுத்துக்கொண்டாலும் யோக்கியமான ஆட்சி நடந்ததென்று பெரும்பான்மை யோராலாவது ஒப்புக்கொள்ளக்கூடிய சரித்திரமோ உண்மையோ இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

எந்தக்காலத்திலும் பாமர மக்களை ஏய்க்க ஒவ்வொரு கூட்டத்தார் அவ்வப்போது தோன்றி தங்களது முரட்டு பலத்தையும், தந்திரங்களையும், வஞ்சகங்களையும் கொண்டு ஒவ்வொரு வழியில கிளர்ச்சிசெய்து ஆதிக்கமும் சுயநலமும்பெற்றிருப்பதாகவே சரித்திரங்களில்மிகுதியும் காணப்படுகிறது. எல்லாதேசங்களைவிட, 'கலை ஞானத்தில்" சிறந்ததாகச்சொல்லப்படும்இந்தியாவிற்குஅதன்பழய கலைகளையும், ஆட்சிகளையும் பார்த்தால் இக்காலத்தில் காட்டுமிராண்டிகள் என்பவர்களிடத்திலும் காணமுயாததும் வெரும் கொள்ளைக் கூட்டத்தாரிடத்திலும் காணமுடியாததுமான செய்திகளைக் கொண்டதாகவே இருக்கிறது.

## வலுத்தவன் இளைத்தவனை ஆளுவான்

எது எப்படி இருந்தாலும் "இளைத்ததை வலுத்தது அடக்கி ஆண்டு அனுபவித்து வரும்" என்னும் இயர்க்கைச் சட்டம் யாராலும் எந்தக் கிளர்ச்சியாலும் ஒருக்காலமும் மாற்றிவிடமுடியாதென்பதே நமது முடிவான அபிப்பிராயமாகும். ஆதலால் இளைத்தவன் தன்னை வலுத்தவனாக்கிக்கொள்ள முயர்ச்சி செய்து கொண்டால்மாத்திரம் வெற்றிபெறலாமே யொழிய மற்றபடி வெரும் கிளர்ச்சியினால் வலுத்தவனைவென்று விடமுடியவேமுடியாது.

## நமது நாடு

நடுநிலையில்நின்றுபேசுவோமேயானால்இன்றையதினம் கல்விஅறிவு, செல்வம்,ஆயுள், தொழில்,மனிதத்தன்மை மானம், தைரியம், முன்னேற்றம், பொதுநலம் முதலியவைகளில் மற்றெந்த நாட்டாரையும்விடநமது நாடுமிகுதியும் வலுவிழந்திருக்கின்றது

உதாரணமாக இந்தியாவில் 100க்கு 10பேர் படித்திருக்கிறார்கள்.

மேல் நாட்டில் 100க்கு 90 பேர் படித்திருக்கிறார்கள்.

இந்தியர்களின் அறிவு அவர்களது "தலை விதியில்" அடங்கி இருக்கின்றது.

மேல்நாட்டார் அறிவு அவர்களது விடா முயர்ச்சியால் தூண்டப்பட்டுவருக்கின்றது.

இந்தியர்களின் ஆயுள் சராசரி 25 வயது.

மேல் நாட்டாரின் ஆயுள் சராசரி 50 வயது.

இந்தியர் வருவாய் ஆள் 1க்கு சராசா தினம் 0—2—8 பை.

மேல் நாட்டா வருவாய் ஆள் ஒன்றுக்கு சராசரி தினம் 2—8—0 அணா.

இந்தியாவில் புதுப்பிக்கப்படும் தேசீயத் தொழிலின் வரும்படி ஒரு மணிக்கு 0—0—1 தம்படி (இராட்டினத்தில் 1 மணிக்குஒரு காசு) கிடைக்கின்றது.

மேல் நாட்டில் புதுப்பிக்கப்படும் தொழில்களில் ஒரு மணிக்கு ஒரு ரூபாய் கிடைக்கிறது.

இந்தியாவில் 100க்கு 93 பேர்கள்இழிமக்கள் "சூத்திரர்" சண்டாளர்(தீண்டார்)மிலேச்சர்(துலுக்கர்)நீச்சர்(கிருஸ்தவர்) முதலானவர்களாக இருக்கின்றார்கள்.

மேல் நாட்டில் எல்லோரும் சரிநிகர்சமானமான மனிதர்களாக இருக்கின்றார்கள்.

இந்தியாவில் தைரியம் ஒரு துப்பாக்கிசத்தம்கேட்டால் குழந்தைகளுக்கு காய்ச்சல் வந்து விடுகின்றது.

மேல் நாட்டில் குழந்தைகள் ஆகாயத்திலிருந்து வெடிகுண்டு எறிய ஆசைப்படுகின்றது.

இந்தியாவின் முன்னேற்றம் "ராம ராஜ்ஜியத்திற்கும் தொல்காப்பிய காலத்திற்கும் போக ஆசைப் படுகிறது.

மேல் நாட்டின் முன்னேற்றம் அரசாட்சியையே வேண்டாமென்கின்றது.

இந்தியாவின் ஆராய்ச்சி சாக்கடைநீரைக்குடித்துதலையிலும்தெளித்துக் கொண்டால்வியாதிசவுக்கியமாகிமோட்சலோகத்திற்குப் பேகலாமென்கின்றது.

மேல் நாட்டு ஆராய்சி இமயமலை உச்சிக்கும் சந்திர மண்டலத்துக்கும் போக முயர்ச்சிக்கின்றது 10000 மைல் 15000 மையில் தூரம் தந்தியில்உருவம் போகின்றது.

இந்தியர்களின் தர்மம் வருஷம்பலகோடிக்கனக்கான பொருளை கோவில் கட்டவும் கும்பாபிஷேகம் செய்யவும் சாமிக்குப் பூசை செய்யவும் உற்சவம் செய்யவும் வாகனம் நகை செய்யவும் சோம்பேரிகளுக்கும் அயோக்கியர்களுக்கும் பிழைப்பை ஏற்படுத்தவும் செலவு செய்யப்படுகின்றது.

மேல்காட்டார் தர்மம் படிப்புக்கும் தொழிலுக்கும் கொடிய வியாதியின் சிகிச்சைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஆராய்ச்சி செய்து அற்புதம்கண்டு பிடிப்பதற்கும் "இழிமக்களை" சரிசமான மனிதனாவதற்கு எல்லாம் மக்களும் சம இன்பமடைவதற்கும்செலவுசெய்யப்படுகின்றது.

இன்னும் இப்படியே நூத்துக்கணக்காக சொல்லிக்கொண்டே போகலாம்.

இவைகளுக்கு யார் பொருப்பாளி? வெள்ளைக்கார அரசாங்கமா? அல்லது நமதுதேசீயமா? என்று தான் கேட்கின்றோம்.

மேலும் இவைகளில் அனேக விஷயங்கள் இந்தியாவில் இன்று மாத்திரமல்லாமல் நம் அறிவுக்கு எட்டாத சரித்திர காலம் முதலாகவே இப்படியே தானே இருந்து வருகின்றது. அன்றியும் இந்த நிலைமைதானே இந்தியாவுக்கு அடிக்கடி மனிதத்தன்மைக்கு விரோதமான கொடுங்கோன்மை ஆட்சியையும் அன்னிய ஆட்சியையும் உலகிலுள்ள மற்றுயாவருக்கும் இளைத்த தன்மையையும் அளித்துக் கொண்டே வந்தது வருகிறது.

## இதற்கு என்ன பரிகாரம்.

இந்தநிலையை மாற்ற இதுவரையில் யார் என்ன முயர்ச்சி செய்தார்கள்? இத்துரைகளில் யார் என்ன முன்னேற்றம் அடைந்தார்கள்? அல்லது அடைந்து வருகிறார்கள்? இது தான் போகட்டும் என்றாலோ இன்றையதினம் நடைபெறும் "காந்தி போரை" யாவது எடுத்துக்கொண்டால்அதுமேற்சொன்னவைகளில் ஏதாவது ஒரு காரியத்தை மாற்ற உதவுமா என்று பந்தயம் கட்டி கேழ்க்கின்றோம். இந்தியாவுக்கு இன்றையத்தினம் உண்மையாய்ச் செய்ய வேண்டிய தொண்டு உப்புக்காய்ச்சுவதா? உப்பு களங்களில் உப்பை வாரிக் கொண்டு வருவதா? அதற்காக மக்கள் ஜெயிலுக்கு போவதா? என்பதை வாசகர்களே நீங்கள் நடு நிலையில் இருந்து நன்றாய் கூர்ந்து சிந்தித்துப்பாருங்கள்.

## வைசிராய் சம்பளம்.

இந்தியாவின் செல்வம்—ஏழைகளின் வரிப் பணம் ஆகியவை "வெள்ளைக்காரர்கள் கொள்ளை அடிப்பதற்கு"த் தகுந்த அளவுப்படி, ஏன்? அதற்கு மேலாகவும் கூட இந்திய தேசிய வாதிகள் என்பவர்கள்கொள்ளை அடிப்பதில்லையா? வெள்ளைக்காரர்கள் கொள்ளைக்கும் இந்தியர்களே ஆதாரமாய் இருந்து அவர்களுக்குஉளவு சொல்லிக்கொடுத்து அவர்களிடமிருந்து பங்கு வாங்குவதில்லையா? என்பதை யோசித்துபாருங்கள். இதற்கு வெள்ளைக்காரன் என்னசெய்வான். "எனக்கு வேண்டாம்" என்று சொல்லுவானா திரு. காந்திக்கு வைசிராய் சம்பளமும் கவர்னர் சம்பளமும் பார்த்து சகிக்க முடியவில்லையாம்.சத்தியாக்கிரகத்திற்குஇதை ஒரு காரணமாய் எழுதி இருக்கிறார். இந்திய தேசிய வாதிகளும் காங்கிரஸ் தலைவர்களுமான திருவாளர்கள் ஸின்ஹா சம்பளமும் சீனிவாச சாஸ்திரி சம்பளமும் அபிபுல்லா சம்பளமும் சிவசாமி அய்யர் சம்பளமும் சர். சி. பி. அய்யர் சம்பளமும்

கிருஷ்ணன் நாயர் சம்பளமும் வெகு தர்மமானதும் நாணயமானதுமான சம்பளமா என்று கேழ்க்கிறோம். இவர்களுக்கு இந்த சம்பளத்தை ஏற்படுத்தினவர்கள் இந்ததிரு காந்தியும்அவர்கொஞ்சி விளையாடும் திரு. தேசிய காங்கிரசும் அல்லவா என்று கேழ்க்கின்றோம். 1920ம் வருஷத்திய சீர்திருத்தம் இந்த திரு "மகாத்மா" காந்தியால் ஒப்புக் கொள்ளப் பட்டதும் வரவேற்கப்பட்டதும் தானா அல்லவா என்று கேழ்கின்றோம். நாம் நாலு திராம்சாராயம் குடித்துக் கொண்டு வெள்ளைக் காரனை ஒரு திராம் சாராயமும் குடிக்க வேண்டாம்என்றால்இதில் நாணயமோ யோக்கியமோ எப்படி இருக்கமுடியும். கஞ்சிவெள்ளம் சாப்பிட்டுக் கொண்டு மாதம் 2 ரூ. செலவில் வாழும் மக்கள் தேசத்து சர் சங்கரநாயருக்கு 6333-5-4 காசு சம்பளம் எதற்கு? பஞ்சாங்கம்சொல்லி பிச்சை எடுத்து வாழும் சர்மாவுக்கும் சாஸ்திரிக்கும் மாதம் 6333-5-4 காசு சம்பளம்எதற்கு? இதை ஏன் "மகாத்மா" வின் தேசியமும் மனசாட்சியும் ஏழைகளிடமிருக்கும் அன்பும் தரித்திர நாராயணனும் ஆக்ஷேபிக்கவில்லை என்று தான் கேட்கின்றோம். தினம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு 0—2—8 பை வீதம் சம்பாதனைசம்பாதிக்கும்(இந்திய) தேசத்தானுக்கு மாதம் 1க்கு 6333—5—4 பை சம்பளம் வேண்டியிருந்தால் அதை தேசிய காங்கிரசும் அனுமதித்து அந்த காங்கிரசின் தலைவரே அந்தப்படி வாங்கிக்கொண்டும் வந்தால் நாள் ஒன்று ஆள்1க்கு 2-8-0 அ. வரும்படியுள்ள (இங்கிலாந்து) தேசத்தானுக்கு என்ன சமபளம் கொடுக்க வேண்டும்? மாதம் ஒன்றுக்கு 95000 தொண்ணூற்றய்யாயிரம் ரூ அல்லவா நாம் கொடுக்கவேண்டும். இப்போது நாம் வைசிராய்க்கு 21000 ரூ. தானே கொடுக்கின்றோம். ஆகவே இந்த ஒருவர் சம்பளத்திலேயே ஏழை இந்தியாவுக்கு மீ 74000 ரூ மீதிதானே? இதுபோலவே சர் சி. பி. ராமசாமி அய்யர் சம்பளம் வாங்கிய 5333-5-4 வீதம் கணக்கு பார்த்தால் சென்னை கவர்னருக்கு மீ 80000 எண்பது ஆயிர ரூ கொடுக்க வேண்டாமா. இப்போது அவருக்கு 10ஆயிரம் தானேகொடுக்கின்றோம். இதில் ஏழைஇந்தியாவுக்கு மீ 70 ஆயிரம் மீதி இல்லையா? இதுபோலவே நாம் உப்பு வாங்குவதில் சர்க்காருக்கு கிடைக்கும் வரிப்பணத்தையும்திருப்பவும்சம்பள ரூபமாக நமது தாஸ் நேரு போஸ் பட்டேல் சாப்ரூ ஸின்ஹா அய்யர் அய்யங்கார் ஆச்சாரி சர்மா சாஸ்திரி சாயபு நாயர் முதலியார் நாயுடு ரெட்டியார் செட்டியார் கவுண்டர் (வகுப்புவாரி பிரதிநிதித்துவப்படி) ஆகிய தேசியவாதிகளும்காங்கிரஸ்தலைவர்களும் காந்தி சிஷ்யர்களும் மீ ஒன்றுக்கு 2000 3000 5000 6000 7000 வீதம் பங்கு போட்டுக் கொள்ளுகிறார்களே ஒழிய யாராவது வேண்டாமென்று சொல்லி வாப்சு செய்து சம்பளத்தை குறைத்துக் கொண்டார்களா? குறைத்தார்களா? குறைக்கவாவது திட்டம் வைத்திருக்கிறார்களா? இந்தப்படியே மற்ற இந்திய தேசாபிமானிகள் வாங்கும் சம்பளத்திற்கும் "கொள்ளைக்கார வெள்ளைக்காரர்கள்" வாங்கும் சம்பளத்திற்கும் யார் வாங்குகின்றசம்பளம் அவர்களது தகுதிக்கும்தேவைக்கும்மேல் கொண்டதுஎன்று கேழ்கின்றோம். ஆகவே இந்தியர்களின்வரி உயர்வுக்கும்அவ்வரிகொள்ளை அடிக்கப்படுவதற்கும் இந்திய தேசிய வாதிகளும் தேசிய காங்கிரசும் அவைகளை ஆதரித்த மகாத்மாக்களும் ஜவாப்தாரிகளா அல்லது வெள்ளைக்காரர்கள் ஜவாப்தாரிகளா? என்று இப்போது யோசித்துப் பாருங்கள்.

## இது வரை செய்தது என்ன?

ஆகவே இந்தப்படி போகும் கொள்ளையை நிறுத்த இதுவரை "மகாத்மா" என்ன செய்தார் இந்திய தேசியம் என்ன செய்தது என்று கேட்கின்றோம்.

இந்த வரியினால் கஷ்டப்படுகின்றவர்கள் குடியானவர்களே யாவார்கள். அவர்களுக்கு கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் தீண்டாத வகுப்பார்களான "சண்டாளர்களாவார்கள். இந்த இரு வகுப்புக்கும் காந்தி கடைசிப்போரில் "மகாத்மா" என்ன வழி செய்தார் அல்லது செய்கின்றார்என்று கேழ்கின்றோம். குடியானவர்கள் வரி குறைய வேண்டுமானால் முதலில் வரிமறுப்புசெய்வதா அல்லது சம்பளமறுப்பு செய்வதா என்று தான் கேட்கின்றோம். அதுபோலவே சண்டாளர்களை மனிதர்களாக்க வேண்டுமானால் முதலாவது கட்டுப்பாடுகளை உடைப்பதா அல்லது கட்டுப்பாடுகளான ராமாயணம் பாரதம் வருணாசிரமம் ஆகியவைகளை நிலை நிறுத்த பிரசாரம் செய்வதா என்று கேட்கின்றோம். இவைகளையெல்லாம் விட்டு விட்டு உப்புக்காய்ச்சுவதால் மக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டு விடும். வேண்டுமானால் பாமரமக்களில் சிலர் ஏமாந்து ஜெயிலுக்குப் போகக்கூடும். இதனால் நமக்கு லாபமும் இல்லை நஷ்டமுமில்லை ஆனாலும் தேசமுற்போக்கு வெகுதூரம் தடைபட்டு விடும். என்றே பயப்படுகின்றோம். அன்றியும வெள்ளைக்காரனுக்கும் தனது கொள்ளைக்குத்தக்க நியாயம் கிடைத்து விடும் என்றும் கருதுகின்றோம். ஆகையால் காந்திப போரால் நாட்டிற்கு நன்மை இல்லை என்றும் கெடுதியே அதிகம் ஏற்படும் என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது.

## கல்லுச் சாமியும் அயோக்கிய மத ஆசாரிகளும்

இந்தியப்பாமரக் குடியானவர்களும் கொடுமைப்படுத்தப்பட்ட வாயில்லாப் பூச்சிகளான கூலிகளும் தீண்டப் படாதவர்களும் பாடுபட்டும கஷ்டப் பட்டும் சம்பாதித்த பணத்தை நமது நாட்டு கல்லுச் சாமிகளும், அயோக்கிய மத ஆச்சாரிகளும், அக்கிரம மடாதிபதிகளும், சூழ்ச்சிக்காரப் பார்ப்பனர்களும், சுயநலப்பட்டத்தவர்களும் மூடபணக்காரர்களும கொடிய முதலாளிகளும் மற்றொருபுறம் கொள்ளையடித்துக் கொண்டு நாட்டைக்கொடுமைப் படுத்திக் கொண்டு இருப்பதை விட உலகத்திற்கே முன்னணியில் இருந்துகொண்டு உலக முற்போக்கில் கவலை எடுத்து உழைக்கின்ற முயர்ச்சியும் தகுதியுமுடைய மக்களுக்குப் போவதில் உலகத்திற்கு என்ன கஷ்டம் வந்து விடும் என்று கேட்கின்றோம். "தகுதியுடையவனே அடைவான்" என்கின்ற இயற்கை சட்டம் யார் தடுத்தாலும் செலாவணியாய்க்கொண்டு தான் இருக்கும.

மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கூச்சல் போடும் சூழ்ச்சிக்காரர்கள் மக்களை தெருவில் நடக்கவிட மாட்டேன் என்கின்றார்கள்.

கடவுளைக் காப்பாற்றவேண்டும் என்றும, கசடர்களோ அக்கடவுளைக்காண மனிதனை அனுமதிக்க மாட்டேன் என்கின்றார்கள்.

மறைகளையும் கலைகளையும் காபபாற்ற வேண்டும் என்னும் சுயநல தூர்த்தர்களோ அம்மறைகளையும் கலைகளையும் மக்கள் கற்க—அதன் உண்மையை அறிய இடம் கொடுக்கமாட்டேன் என்கின்றார்கள்.

இந்தமாதிரி மக்களைக்கொண்ட ஒரு நாட்டில் உள்ள ஒரு அரசாங்கத்தை அல்லது வெள்ளைக்காரர்களை ஒழித்துவிடுவதால் யாருக்கு என்னபலன் கிடைக்கும் என்பது நமக்கு விளங்கவில்லை.

வெள்ளைக்காரர்களையோ அல்லது அரசாங்கத்தையோ ஒழித்து விட்டு இந்த பாமர மக்களையும் ஏழைக் கூலிகளையும் தீண்டக் கூடாத "சண்டாளர்களையும்" பிரகு யாரிடம் ஒப்பு விப்பது என்பதும் நமக்கு விளங்கவில்லை.

## ஒத்துழையாமையும் பார்ப்பனரும்

ஒத்துழையாமையின் போது சர்க்கார்மீது மக்களுக்கு எவ்வளவோ வெறுப்பை உண்டாக்கினோம். அதனால் சர்க்காரும் சற்று கலங்கினார்கள். ஆனால அது சமயமும் ஒருபார்ப்பான் தான் திரு. காந்தியைப் பிடித்து சிறையில் வைக்க யோசனை கூறி சர்க்காருக்கு உதவி செய்தார். அதன் பிறகு அந்த பலனை யார் அனுபவித்தார்களென்றால் அந்தப்பார்ப்பனர்களேயாவார்கள். உதாரணமாக ஒத்துழையாமை ஒடுங்கின உடனே திரு. ராஜகோபாலாச்சாரியார் பார்ப்பனர்களுக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்கவும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்ற மந்திரிகளை நியமிக்கவும கோவைக்கும் சென்னைக்கும் ஓடிவந்து விட்டார். மற்றும் ஒத்துழையாமையை தழுவித்தபார்ப்பனர்கள் எல்லாம் உடனே காங்கிரசுக்காரர்களாகவும், தேசியவாதிகளாகவும் ஆகி பார்ப்பனரல்லாதார்கட்சியைஒழிக்க ஆளுக்கொரு கல்லைத்தூக்கிப் போட்டார்கள் அதுபோலவே இப்போதும் தமிழ் நாட்டில் இந்த காந்தி போரின் போரால் ஒரு ஆயிரம்-இரண்டாயிரம் பேரையாவது நாம் ஜெயிலுக்கனுப்பி வைத்தோமேயானால் அடுத்து வரும் ஆகஸ்டு செப்டம்பர் மாதம் சட்ட சபை தேர்தலில் பார்ப்பனர்களுக்கு அல்லது அவர்கள் அடிமைகளுக்கு ஓட்டு வாங்கிக்கொடுத்துபார்ப்பனரல்லாதார் கட்சியை அழித்து பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஏற்ற மந்திரிகளை நியமிக்க இதே திரு. ராஜகோபாலாச்சாரியார் மறுபடியும் சென்னைக்குஓடிவந்து விடுவாரென்பதில யாருக்கு என்ன சந்தேகம். அதற்காகவே திருவாளர்கள் சத்தியமூர்த்தி, வெங்கிட்டரமணய்யங்கார் சீனிவாசய்யங்கார், முத்துரங்க முதலியார், வரதராஜுலு நாயுடு ஆதிநாராயண செட்டியார் முதலாகியவர்கள் காங்கிரசில் ராஜினாமா கொடுத்துவிட்டு திரு ராஜ ராஜகோபாலாச்சாரியார் வசம காங்கிரசையும் ஒப்புவைத்துவிட்டு தயாராய் நாக்கில்ஜலம் சொட்டகாத்துக்கொண்டிருக்கிறார்கள்.

[11-ம் பக்கம் பார்க்க]

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

### தேர்தல் சூழ்ச்சி.

இந்த பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் சட்டசபைக்குப்போவதுதான் காந்திப்போரின் சட்ட மறுப்பும் சத்தியாக்கிரகமும் என்பதானது தேர்தல் சூழ்ச்சியாய் முடியுமே அல்லாமல் வேறு ஏதாவது காரியம் தமிழ் நாட்டில் நடக்குமா என்று கேட்கிறோம். மேலும் சர்க்கார் மதுவிலக்குப் பிரசாரத்தைப் பரிகாசம் செய்து கெட்ட எண்ணம் கற்பிக்கும் இதே திரு. ராஜகோபாலாச்சாரியாரின் சென்ற தேர்தலுக்கு முந்திய மதுவிலக்குப் பிரசாரத்தின் யோக்கியதை என்ன ஆயிற்று?

வருணாச்சிரமக்காரரான ஒரு திரு வெங்கிட்டரமண அய்யங்காருக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்கவும் பார்ப்பனரல்லாத கட்சி மந்திரிகளை அழிக்கவும் தானே உபயோகப்பட்டது. இந்த திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் தானே ஒத்துழையாமையை அழிக்க சூழ்ச்சி செய்து காங்கிரசையும் அய்யங்கார் வசம் ஒப்புவித்து அவருக்குத் தலைவர் பட்டம் சூட்டினார்.

### நமது சபதம்.

டில்லி காங்கிரசில் சூழ்ச்சி செய்து காக்கினாடா காங்கிரசில் வெளிப்படையாக நமது மனம் பதறும்படி திரு. ராஜகோபாலாச்சாரியார் தானே ஒத்துழையாமைக்கு கருமாதி செய்தார்? அப்போதே நாம் காங்கிரசை எதிர்த்துப் பிரசாரம் செய்வதாய் சபதம் செய்துவிட்டு வந்தோம் அந்தப்படியே செய்தோம். பிறகு பெல்காம் காங்கிரசில் திரு. காந்தியைப் புரோகிதராய் வைத்து திதியும் செய்து விட்டார். அப்போதும் திரு. காந்தியிடம் நாம் இந்த கெதி ஆகுமென்று சபதம் கூறி விட்டுத்தான் வந்தோம். அடுத்தாற்போல் காஞ்சீபுரத்திலும் வைத்தியக்கார திரு. கல்யாண சுந்தர முதலியாரைக் கொண்டு எம்போன்றவர்களைத் தைரியமாய் வெளியாக்கினர். அப்போதும் பொது ஜனங்களிடம் இந்த விஷயங்களைச் சொல்லிச் சபதம் கூறிவிட்டே வெளியேறினோம்.

கடைசியாக பெங்களூர் சென்று திரு. காந்தியவர்களிடம் தனித்து உண்மைகளைச் சொல்லிவிட்டு வந்துதான் நமது தொண்டை தீவிரமாய் ஆரம்பித்தோம். ஆகவே அன்று முதல் இன்று வரை நாம் ஒரே கொள்கையுடன் ஒரே தொழிலைத்தான் செய்து வருகின்றோம். இதனால் நம் நாட்டுக்கு இதுவரை என்ன கெடுதல் ஏற்பட்டு விட்டது என்பது நமக்கு விளங்கவில்லை. நமது தொண்டுக்கு வேறு விதமாக சமாதானம் சொல்ல முடியாதவர்கள் கடவுளும் மதமும் கலைகளும் போய்விட்டது என்றுதான் சொல்கின்றார்களே அல்லாமல் வேறு ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே கடவுளுக்காகவும் மதத்திற்காகவும் கவலைப்படுவது போன்ற ஒரு முட்டாள் தனம் உலகில் வேறு ஒன்று இருக்கக்கூடுமென்று நம்மால் கருத முடியவில்லை. இதைப்பற்றி அநேக தடவை எழுதி இருக்கின்றோம். ஆதலால் இப்போது மறுபடியும் விரிக்கவில்லை.

நம்மைப் பொருத்தவரை நமது மக்களுக்குச் சுயமரியாதை ஏற்பட்டு மனிதத்தன்மையுடன் எல்லோரும் சரிசமமாக வாழவேண்டுமென்பதுதான் நமது ஆசையே ஒழிய வெள்ளைக்காரன் போவதோ இருப்பதோ நமது கவலை அல்ல. உலகத்தில் நமது பாழும் இந்தியாவைத் தவிர மற்ற எந்த நாட்டிலும் இது சமயம் சமதர்மக் கொள்கைகளே தலைவிரித்து ஆடுகின்றன. இந்தியா மாத்திரம் பார்ப்பன ஆதிக்கத்திலும் முதலாளிகள் ஆதிக்கத்திலும் நசுங்குண்டு அன்னிய ஆட்சிக்கு உளவாளியாகவும் கூட்டாளியாகவும் இருந்துவருகின்றது. இந்த நிலையை மாற்ற திரு. காந்தியின் உப்புக்காய்ச்சும் சத்தியாக்கிரகமோ சட்டமறுப்போ ஒருக்காலும் பயன்படாது என்று நாம் கருதுவதால் நாம் அதில் கலந்து கொள்ள முடியாமைக்கு வருந்துகின்றோம். மற்றபடி உண்மையான விடுதலைக்கும் சமத்துவத்திற்கும் என்று எந்த வேலை ஆரம்பித்தாலும் நமது உயிரையும் கொடுக்க நாம் எப்போதும் தயாராகவே இருக்கின்றோம்.

### ஈரோடு ஆலயப் பிரவேச கேசு அப்பீல்.

ஈரோடு ஆலயப்பிரவேச விஷயமாய் நடந்த கேசில் மாஜிஸ்டிரேட் செக்ஷன்படி குற்றம்சாட்டி எதிரிகள் மூவருக்கும் தலைக்கு 60 ரூ. வீதம் அபராதம் விதித்த தீர்ப்பின் பேரில் டிஸ்டிரிக்ட் கலெக்டரிடம் அப்பீல் செய்ததில் அப்பீலில் ஒரு செக்ஷன்படி குற்றம் ஏற்படவில்லையென்று சொல்லி அதாவது விக்கிரகம் அசுத்தப்படுத்தப் பட்டது என்கின்ற 295 வது செக்ஷன்படி ஏற்பட்ட குற்றத்தை தள்ளிவிட்டு 297 வது அதாவது உத்திரவில்லாமல் உள்ளேபோனது என்கின்ற 297 வது செக்ஷன் குற்றத்திற்கு 30 வீதம் மாத்திரம் அபராதம் விதித்து மீதி நபர் ஒன்றுக்கு 30 ரூ. வீதம் வாபீசு செய்யப்பட்டது இதன் மீது ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்படும்.


சிவலிங்க விலாசம்
புத்தகசாலை ஈரோடு பவானி

எங்களிடம் "குடி அரசு" "திராவிடன்" பத்திரிகைகளும் "குடி அரசு" பதிப்பகம் புத்தகங்களும் கிடைக்கும்.


ஈரோடு டி. மு. கோர்ட்டு
1928 ௵ O. S No. 145.
1929 ௵ E. P. R. 1750.
1930 ௵ E. A. No. 307.

செங்கோட முதலி—வாதி
கிருஷ்ணசாமி நாயுடு வகையரா 9 பேர் | பிரதிவாதிகள்.

மேற்படி நெம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் பெற்றிருக்கும் அடமான டிக்கிரியை நிறைவேற்றி ஏலம் போட்டீசு வாயிதா 26-3-30 ல் ஏற்பட்டிருப்பதால் மேற்படி தேதியில் 3, 5, 6 பிரதிவாதிகள் தங்களுக்குள்ள ஆக்ஷேபனையை தெரிவித்துக்கொள்ளவேண்டியது. தவறினால் ஒரு கட்சியாய் முடிவு செய்யப்படும்.

ஈரோடு, 12-3-30. } E. S. தெண்டபாணி ஐயர், வாதி வக்கீல்.



ஈரோ நாடார் சங்கத்தில் திரு. ஈ. வெ. ராமசாமியாருக்கு டீபார்ட்டி வைத்து வரவேற்பு பத்திரம் வாசித்து கொடுத்தகாட்சி

திருவாளர்கள் களஞ்சியம் மொய்தீன் ராமநாதன் பிரகாசம் ஈ. வெ. ரா. நாகம்மாள் மகமதுயூசுப் சுவாமி அற்புதானந்தா பெருமாள் சாரங்கபாணி சுப்பையா முதலியவர்கள் இருக்கின்றார்கள்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் என்ற பொய்க் கதையையும் எழுத மறந்து விட்டனர் போலும்!

இனி கம்பர் போக்கைக் காண்பாம். அவர் இராவணன் மயனை அழைத்துத் தனனுடைய அழிந்த நகரைப் புதுப்பித்தான் எனப் பொருந்தப் பொய் கூறுகிறார். வீடணன் கரனே வலியச் சண்டைக்குச் சென்றான் எனக்கூறியதாக வால்மீகி கூறியுள்ள பொருந்தாக் கூற்றுக்கு மாருக இராமனுதிபரைச் சூர்ப்பனகையை அவமானம் செய்ததையும் இச் சந்தர்ப்பத்தில் கம்பர் சேர்த்துச் சொன்னதாகக் கூறுகிறார். மாலையிலும் காலையிலும் நண் பகலிலும் நடந்ததாக மூன்று சந்தர்ப்பங்களில் வால்மீகி கூறும வரலாற்றை ஒரே வேளையில் ஒரே இடத்தில் நடந்ததாகக் கம்பர் எழுதுகிறார்.

இந்திரசித்தைத் தடுத்து வீடணன் கூற அவனை இராவணன் கடிந்து பேடியென இகழ்ந்து கூறி அவன் வேண்டுமானால் சண்டைக்கு வாராமல் இலங்கையிலேயே இருக்கலாமெனக் கூறினதாகவும் பின்னரும் வீடணன் இராவணனுக்கு இரணியனுடைய கதையைக் கூறிச் சீதையை விடச் சொன்னதாகவும் கம்பர் கூறுகிறார், இது முழுதும் கம்பருடைய கற்பனையே. இரணியனுடைய பேச்சே இந்த இடத்தில் இல்லை. கடைசியில் இராவணன் வீடணனை நோக்கிக் கூறியதாகக் கம்பர் தமது அபிப்பிராயத்தைக் கூறுகிறார். அதைக கம்பர் அபிப்பிராயமென என் கூறுகிறேனென்றால் இது வால்மீகி கூருதது. அதில் கம்பர் இரணியனுடைய கதையைப் புதுவதாக இவ்விடத்தில் கூறியதற்கேற்ப இராவணன் கூற்ருக, வளர்த்த தன் தந்தையை பகைவனுல் கொல்வித்து மகிழ்ந்த பிரகலாதனும் எனது பகைவனிடத்தில் நண்பு செய்யும் நீயும் ஒப்பாவீர், பிரகலாதன் தன் தந்தையைக்கொல்வித்து தான் அரசனானது போல நீயும் என்னைக்கொல்வித்து என் அரசைக் கைப்பற்ற விரும்பினை. என் கண் முன் நில்லாதே.'' எனக் கூறினர். இது மிகவும் பொருத்தமே,

சீதையைச் சிறை செய்து வந்தமையை இகழ்ந்து கும்பகர்ணன் கூறினதாக விரிவாகக் கம்பர் கூறுகிறார். அது வால்மீகிக்கு முற்றிலும் மாறுனதே. மேலும் கும்பகாணன் கூற்றைக் கேட்டுச் சினநத இராவணனை பிரகத்தன் வேறு கூறிச் சினந் தனிந்தான் என்று வால்மீகி கூற கம்பர் அவன் கும்பகர்ணனைப் புகழ்ந்து இணங்கிப் பேசினதாகக் கூறுகிறார்.

உயுத்தகாண்ட ஆரம்பத்தில் முதல்படலம் கடல்காண்டபடலம். அதில் இராமன் கடலைக் கணடு அங்குள்ள பொருள்களை ஆராய்ந்து சீதையினுடைய உறுப்புக்களுக்கு உவமை கண்டான் எனக் கம்பர் கூறுகிறார். தோள, முறுவல் இவைகளுக்கு உவமை கூறி விவரித்தார். இவருக்கு விருப்பமான கொஙகைக்கு உவமை கூருது விட்டாரே கம்பர் என எண்ணிப் பார்த்தோம். கம்பர் அதற்கு அங்கே உவமை காணுதவராஞர். ஆனுல் அவருக்கு அச் சொல்லைக் கூருமல் விடமனமில்லாமல் பதினெராம் பாடலில் சீதையைக் "கொஙகைக்குயிலே எனக் கூறினர். இனிமேற் செல்லுதும்.

## சிவகங்கை வாலிபர்

சங்கத்தின் ஆதரவில் ஆதித்த நாலார் கைத்தொழில கல்வி நிலயத்தின் முன்பாக மார்சு மீ 8 உ மாலை 5—30 மணிக்கு ஒரு பொதுக் கூடடம் கூட்டப்பட்டது. அக் கூட்டத்திற்கு இவ்வூர் பிரமுகர்களான திருவாளர் எஸ். ராமச்சந்திரன்பி. எ. பி. எல் தலைமை வகித்தார். திருவாளர் சௌந்திரபாண்டியன் எம. எல். சி. மானுமதுரை ஸ்பெஷல் டிப்டி கலெக்டர் திருவாளர் அமிர்தசாமி பிள்ளை முதலானேர் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தனர். அதுசமயம் "பிராமணரல்லாதார் நன்மையைக் கோருபவரும் பெரும் உழைபபாளியும் செல்வாக்குள்ள வியாபாரியுமான திருவாளர் எ. என் பழனியப்ப நாடார் அவர்கள் சென்ற பிப்ரவரி மாதம் 14 உ காலமானதைக் குறித்து இக் கூட்டம அவரது குடும்பத்தினருக்கு தனது துக்கத்தையும், அநுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது'' என்னும் தீர்மானம் சக்கத்தினர்களால் நிறைவேற்றபபட்டது.

## பட்டேல் தண்டிக்கப்பட்டார்.

உயர்திரு வல்லப்பாய் பட்டேல் அவர்கள் 144 வது பிரிவுப்படி போட்ட அரசாங்க உத்திரவை மீறி குற்றததை ஒப்புக் கொண்டதால மூன்று மாதம் தண்டனையும் 500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பெற்ருர்.

## கலப்புமண நாடகம்

8—3—30 தி இரவு சிராப்பள்ளி நாடகக் கொட்டகையில் கலப்புமண நாடகம் ஒன்று அதிவிமரிசையாய் நடத்தப்பட்டது. கொட்டகை நிரய ஜனங்கள் வந்திருந்தார்கள். அதில் திருவாளர் மதுரசந்த ஆர்மோன்ய வேலாயுதசாமி அவர்கள் சுயமரியாதை கீதம்பாடினர். மேற்படியாருக்கு புஷ்பமாலை போடப்பட்டது. அநேகர் களிடமிருந்து சுயமரியாதை பாட்டு என்ற கடிதஙகள் மேடைக்கு வந்த வண்ணமாகவே யிருந்தன. மேற்படி ஒவ்வொரு கடிதஙகளுக்கும் வேலாயுதசாமி அவாகள் ஒவ்வொரு சுயமரியாதைப்பாட்டு பாடினர். என்று இ. எஸ். எ. எல். எழுதுகிறார்.

## சம உரிமைப் பிரசாரம்

திருநெல்வேலி ஜில்லா பரமன்குறிச்சி பிரசார சர்க்கியூலர்

சகோதர சகோதரிகாள்!

நமது நாட்டில் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்து அறிவுடைய மக்களுக்கு இடுக்கண் விளைவிக்கும் புரோகிதக் கொடுமையும் சுய நல சூட்சியும் சொலலமுடியாது. நாமும் அனுபவமாய் அனுபவித்துவருகிறோம்.

1. நமது உழைப்பால் நமது பொருளால் நடைபெறும் பொது இடங்களில் நமக்கு உரிய உரிமையைப் பெற நாம் பின் வாங்காது முயற்சிக்கவேண்டியது ஒவ்வொருவருடைய கடமை. இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நமது பொருளை கொடுத்து விட்டு ஏமாந்து நிற்பதும் மிருகங்களிலும் கேவலமாய் நம்மை சில அறிவாளிகள் நினைபபதும் நாம் இனி சகித்துக்கொண்டிருக்கமுடியாது. நாம் ஏமாந்து கொடுக்குமட்டும் நம்மை எவ்வழிகளிலும் அவர்கள் தூர் ஆசையால் அடக்கி ஆளவே நினைப்பார்கள். ஆகையால் நாம் மனித வடிவுடையவர்கள் எஙகளுக்கும் மனிதர் வசிக்கும் உலகில் சம உரிமை உண்டு, சம உரிமையை இழந்து வாழ்வது மக்கள் செயல் இல்லை. மிருக வாழ்க்கையாகும் மிருகத்தின் தன்மை விட்டு மனிதத் தன்மையுடன் வாழ வேண்டும் என்று கருதி ஒவ்வொருவரும் தனது நித்திய கடமை சில செய்ய வேண்டி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. அதாவது தங்களுக்குச் சம உரிமை இல்லா ஸ்தாபனஙகளுக்கு ஏதும் பொருளோ பிரயாசையோ செய்யாது அத்தகைய ஸ்தாபனஙகள் எவ்விதமாகிலும் நடை பெறவிடாது பொதுஜன ஆதிக்கத்தில் கொண்டு வர முயற்சித்தல்.

3, நமது பொருளால் வாழும் புரோகிதர்கள் நம்மை, காணிக்கை அர்ச்சனை யென்று ஏமாற்றி வாழும் தன்மைக்காக இந்த ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். இந்த விதமான ஸ்தாபனம் இல்லையானுல் இன்னவர்கள் ஜீவியம் நல்ல வழியில் நடத்த ஏற்படும் என்று கருதி இவ்வித ஏமாற்றத்தில் இருந்து மக்களை விடுதலை செய்தல்.

4. ஒழுங்கீனங்களுக்கு உருவாக இருக்கும் ஓர் வகுப்பார் ஒழுக்கத்தில் மேம்பட்டவர்களைப் பிறப்பினுல் தாழ்மை யுடையவர்களென்று நினைத்து பொது ஸ்தாபனஙகளில் சம உரிமையோடு வாழ இடமளிக்க மறுப்பது அவர்களின் சுயேச்சை அதிகாரத் தனமை விளங்கும். ஆதலால் அன்புடைய மனிதர்க்கு உலக வாழ்க்கையில் சம உரிமை அளிக்க மறுக்கும் ஸ்தாபனங்கள் இல்லாமல் ஒழிக்கப்படவேண்டியதுமக்கள் வாழ்க்கைக்கு மிக அவசியமானது. நாம் அறிவுடையவர்களாகவும் சுதந்திர வாதியாகவும் வாழவேண்டுமானுல் தனது வாழ்நாளில் மேல்கண்ட கொடுமையை எந்த விதத்திலும் தொலைத்து நன்மைபான விஷயங்களுக்குப் பிரயோஜனமான வழிகளில் நடந்து வரவேண்டும்.

இதற்காக! திருச்செந்தூர் தாலூகாவிலும் அதிலும் திருச்செந்தூர் ஆலயத்தில சம உரிமைககாக இந்தக் கொடுமையை நிவர்ததிக்க நாஙகள் பிரயாசையுடன் முயற்சி செய்வதால் சகல கனதனவான்களும் உதவிபுரிந்து தாஙகளும் தஙகளால இயனற பிரசாரததுடன உதவி புரிய அனபுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஒப்பம்

தா. சு. மு. பெருமாள், பரமன்குறிச்சி, ஜீ. ராமசாமி வி. எம். தாலூகா ஜில்லா போர்டு மெம்பர், பரமன்குறிச்சி. ஜெகதீசன் வி. எம். தண்டுபத்து. பி. ஆர். ஆதித்தன், காயாமொழி. எ. ஞானகுருசாமி, பரமன் குறிச்சி. சுவகாந்தி அப்பன, பரமன் குறிச்சி.

## மாகாண சுயமரியாதை மகாநாடு வசூல்.

| | |
|---|---|
| சென்ற வாரம் வரை வசூல் ரூபாய் | 4000-0-0 |
| திரு. பி. எல. ஏ. செங்கோட்டையா & பிரதர்ஸ் ரூ. | 250-0-0 |
| எஸ். எம். பி. எம். கோ, ரூ. | 250-0-0 |
| ஆக இது வரை வசூல் ரூபாய் | 4500-0-0 |

மகா-ா-ா-ஸ்ரீ உடுமலைப்பேட்டை டி- மு. கோர்ட்டார வர்கள் சமுகத்திற்கு

1929 ஞு A. C, No 411,

வாதி—உடுமலைப்பேட்டை தாலூக்கா ராகபாவியிலிருக்கும் பச்சரா வெங்கிடசாமி நாயக்கர் மகன் குத்திரப்ப நாயக்கர்.

பிரதிவாதி—ஷை தாலூக்கா விருகலபட்டியிலிருக்கும் பொன்னப்ப பண்டாரம் மகன் அங்கமுத்து பண்டாரம்.

மேற்படி நெம்பரில் வாதி பிரதிவாதிபேரில் புரோநோட்டுப்படி ரூ. 64-15-0-க்கு தாவா செய்து அது விசாரணைக்காக 1930 ஞு மார்ச்சு-மீ 24-உ வாயிதா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதி காலை 10-மணிக்கு ஷை கோர்ட்டில் ஆஜராகத் தவறினுல் ஒரு கட்சியாய் தீர்ப்பாகிவிடும்.

N. Mounaguruswami Naidu
வாதியின் அட்வகேட்
உடுமலைப்பேட்டை, 10-3-30.

ரூ. 500 இனும் எப்படி?
விபரம் தெரிய ½ அணு ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.
மானேஜர், தாபற்பெட்டி 92 சென்னை.

# குட்டி கேழ்க்கும் குளுமாய்

## திருச்சிறுப்பள்ளியில் மூட நம்பிக்கையும் அநாகரீகமும் பார்ப்பனரின் கருணையும் வேதம்படித்ததின்லாபமும்

மூரசூர் வேணுகோபாலன் எழுதுவது.

தென்னிந்தியாவில் திருசசிறுப்பள்ளியில் புத்தூர் என்றொரு ஊருளது இக்கிராமத்தின் கிராம தேவதையாகிய குளுமாயி அம்மன் உய்யகுண்டா நதியின் ஒரு கரையில் உள்ளது. இதற்கு வருடா வருடம் மார்ச்சு மாதம் உற்சவம் நடைபெறும். இது விழாவன்று. போர்க்களமேயாகும். கொடியேற்றிய ஒன்பதாம் நாள் இராத்திரி பனை ஓலையினால் சிங்கத்தின் மேல் ஓர் பெண் வீற்றிருப்பதுபோல் ஒரு படம் பின்னி பூமாலைகளைச் சாற்றி ஒரு ப்பரத்தில் வைத்து ஒரு மைல் தூரத்திலிருக்கும் அக்கோயிலினின்று தூக்கி வரப்படுகிறது. இதைக் காண சுற்றுகிராமங்களின்றும் திருசிறப் பாத்தினின்றும் கூட்டம் கூட்டமாக வருகின்றனர். குட்டிச் சுவருக்குச் சமானமான குட்டி குடிக்கும் குழுமாயம்மனை மேளத்துடனும் வாண வேடிக்கைகளுடனும் தூக்கி வரப்பட்டு "அழகிய குளிர்ந்த குணத்தையும் பிரம்ம ஞானத்தையுடைய வரும், வேதத்தைத் திருப்பித்திருப்பிக் கீழ்த்தலையாகப் படித்தப் பிராமணர்" அக்கிரஹாரத்தில் இறக்கப்படுகிறது. இதனால் பிராமணர்களின் சைவமும், வேதப்படிப்பும குணமும், கருணையும் தெரிந்து கொள்ளலாம்.

மறுநாள் அதிகாலையில் சுமார் நான்கு மணிக்கு இதற்கெனவேயிருக்கும் ஒரு குடிகார மருளாடி சாமி ஆடுகிறான். கடவுள் கேவலம் ஒரு மனிதன் மேல் வந்து ஆடுவான் அன்றியும் ஓர் பெண் தெய்வம் ஆண் பிள்ளைமேல் வந்து ஆடுவதென்றால்வியப்புதான் வேடிக்கைதான். மருளாடும்போது அக்கிரஹாரப் பிராமணரும் மற்றுஞ் சிலரும் ஒன்று சேர்ந்து ஈன்று பத்து நாள் அல்லது பதினைந்து நாட்களாகிய ஐந்தாறு ஆட்டுக்குட்டிகளை பனை ஓலைப் படத்திற் கெதிரே இரக்கம், மானம், வெட்கம் நாகரீக மின்றி இதற்கெனவேயிருக்கும் கொலையாளியை வெட்டச் சொல்லுகிறார்கள். பிறகு இதற்கெனவே ஒரு வாால்தானஞ் செய்த ஒரு சிறு வெள்ளிக் கிண்ணத்தில் பிடித்து கட்குடிந்து விட்டு ஆடுகின்ற மருளாளியினிடங் கொடுக்கிறார்கள். அம்மருளாடி செய்வதை உற்று நோக்கி கூர்மையாகப் பார்த்தால் வெகு வேடிக்கைதான். குழுமாயி குட்டி குடிப்பது மூட நம்பிக்கைதான் இரத்தத்தை வாங்கின மருளாடி வாயில் வெகு கஷ்டததுடன் கட்குடித்த போதையால் வாயில் ஊற்றிக்கொள்ளுகிறான். இதற்குள் துணிகளை தயாராக வைத்திருக்குமொருவன் மருளாடிவாயில் வைக்க மருளாடி உண்ட இரத்தத்தை அத்துணியில் உமிழ்ந்து விடுகிறான். பிறகு இளநீர் கொடுக்கிறார்கள் அந்நீரால்கொப்புளித்து உமிழ்கிறான். இப்படிக்கொடுக்கும் குட்டிகள் ஸர்க்காரால் கொடுக்கப்படுகிறது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதனால் இக்குட்டிகளுக்கு ஸர்கார் குட்டிகளென்று பெயர். இது உண்மையா பொய்யா என்று தெரிந்து கொள்ள ஆதம்பாக்கம் ஜீவகாருண்ய சபையார் கலெக்டருக்கெழுதி கேட்டதில் இது பொய்யென்று ஏற்பட்டது இக்கொலைத்திருவிழாவை நிறுத்த முயற்சியெடுத்திருக்கும் பொது ஜன ஊழிய சங்கம் சர்க்கார் குட்டிக் கொடுப்பது பொய்யென்று பத்திரிகை மூலமாகத் தெரிவித்தார்கள்.

விடிந்ததும் மூடப் பிரார்த்தனை செய்து கொண்ட ஆண்களும் பெண்களும் இத்திருவிழாவுக் கென்றே வெள்ளை மயிரில்லாமல் கருப்பு வெள்ளாட்டுக்குட்டிகள் விற்கிறவர்களிடம் வாங்கி வந்து கொலையாளிகளிடம் கொடுக்கிறார்கள் அவர்கள் அவைகளை இருவர் பிடிக்க வெட்டுகிறார்கள் வெட்டிய குட்டிகளை மருளாளியினிடம் கொடுக்கிறார்கள் இதற்கு காணிக்கை கொடுக்க வேண்டும். அவன் அக்குட்டிகளின் கழுத்தில் வாயை வைத்து குடிப்பது போல் பாசாங்கு செய்கிறான் இதற்குள் துணிகளோடு தயாராயிருப்பவன் துடைத்து விடுகிறான் இம்மாதிரி அந்நாள் முழுதும் சுமார் 500 குட்டிகளை வெட்டுகிறார்கள் என்ன அநியாயம்? என்ன நாகரிகம்? மிஸ்மேயோ எழுதியது பொய்யா? அம்மன் குட்டி குடிக்க விரும்பினால் மந்தைகளில இழுத்துக் குடிக்கக் கூடாதா மனிதர்களைக் கேட்க வேண்டுமா அப்படி குட்டி கொடுப்பினும் அம்மனுக்கு ஒன்றுஞ் சேரவில்லையே எப்படியெனில் இரத்தம் தரையிலும் கரி மனிதருக்கும் தோல தோல்காரனுக்கும் மயிர் முதலிய அழகான வஸ்துக்களுக்கும் எருவாகவும் அடைகிறது கடைசியில் கடவுளுக்கு மீதி ஒன்றுமில்லையே.

இவ்விதமாக கடவுளுக்கெனச் செய்யும் கொலை எப்பொழுது நிற்குமோ இதைப் புத்தூர் "பிராமணர்கள் நிறுத்த மாட்டார்களா அல்லது, "செய்வது சிவபூசை இடிப்பது பெருமாள் கோயில்" என்பது போல் நாங்கள் பிராமணர் சைவம், வேதம் படிக்கிறோம், தொடப்படாது எங்களை நாங்களிருப்பது அக்கிரஹாரம் இங்கே யாரும் வர வேண்டாமென்று சொல்லிக் கொண்டிருப்பார்களா இப்படி யிருப்பின் இது அக்கிரகாரமன்று "அக்கிரம கிராமம்" ஆகையால் இந்த உர்ச்சவத்தை கொலையில்லா உர்ச்சவமாக நடத்துவாரென்று நினைக்கிறோம் சகோதர சகோதரிகளே மூடத்தனமாக பலிக்கொடுத்தலை விட்டு சன்மார்க்கத்தைத் தேடும்.

# பேயாடுதல்

மகாபலிபுரம் ம.வ. நா. எழுதுகிறார்

மதுராந்தகம் தாலூகா கூத்தூரில் அங்காளம்மன் கோவில் ஒன்றுளது அதில் மாசி மாதம் அமாவாசை இவ்வூர் பெருநாளாகும். அவ்வமயம் பார்த்தவர் பயங்கொள்ளும்கோரமானதோர் சிம்ம உருவத்தின் மீது பெண் சிலை ஒன்றை அலங்கரித்து அருகேயுள்ளதோர் சுடுகாடு எடுத்துச் செல்கின்றனர்.

வழிநெடுக பேய் பிடித்திருப்பதாக நினைத்துக் கொள்ளும் பேதைப் பெண்கள் தலைவிழ புலனழிய அரை ஆடை அவிழ்வதையும் கவனியாது வன்னெஞ்ச வாலிபர்கள் கண்டு நகைப்பதையும் கண்டு நாணாது ஆடிச் செல்கின்றனர்.

அச்சுடுகாட்டில் எங்கு பார்த்தாலும் தானியக்குவியல்களும் காய் கனித்திரள்களும், சட்டி பானைப் போர்களும் பிரமிக்கச் செய்கின்றன ஓர் புறம் பிணம்வேகுதலினின்றெழும் துர்நாற்றம் சகிக்கற்பாலதன்று மற்றொரு புறம் அம்மனுக்கு ஆராதனை யென அளவின்றி அறுக்கப்படும் ஆடுகோழிகளின் இறத்தப் புரட்சியையும், துண்டிக்கப்பட்ட முண்டங்கள் துள்ளிக் குதிப்பதையும் பிணம் பிடுங்கித்தின்னும் மிருகங்களையொத்த பூசாரித்தடியன்கள் கைவிவெறிகொண்டு கோரமான உருவத்தோடு. சிலம்பொலியும் பறையறையும் முழங்க நடிக்கும் காட்சியையுங் கண்டு, அப்பெணகள் மயங்கி மூர்ச்சையடைந்து பேய் கொண்டவர்களெனக் கூறி, மதப் பேய் பிடித்த பூசாரித்தடியன்கள் அங்கங்கைகளை இழுத்துப் பரித்து பேய் ஓட்டுவதாகச் சொல்லி அவர்களின் அரிய கற்பை யோட்டுகின்றனர் ஐயோ இப்போதைப் பெண்கள் அறிவற்று தலைவிழ்த்து கைநீட்டி கால்பரப்பி ஆடுங்கோலம் காட்டுமிராண்டி கோலமேயாகும் இத்தகைய பெண்களைக்கூட பூசாரிகள் காம உணர்ச்சியுடன் அப்பேதைகளை பேய் ஓட்டுவதாகச் சொல்லி அவர்களின் கற்பை ஓட்டுகின்றனர்.

அம்ம! அம்மட்டோ! பெரியதோர் மயான சூரனின் சிலையொன்று மண்ணாற் செய்த அலங்காரத்துடன் ஓர் புறம் கிடத்தியுள்ளது அதை இறுதியாக அங்கு கொண்டு வரப்பட்ட அம்மன் சிலை பலவித ஆடம்பரங்களிடை அச்சூரனை சம்மாரம் செய்கிறது அவ்வேளை அங்கு குழுமிய மக்கள் மேல் விழுந்து அடித்தும் இடித்தும் பரித்தும் வெட்டுண்ட வீரனின் சிலையினின்றும் ஒருபிடி மண் கொள்ள உயிர்விடுகின்றனர். அம்மண்ணை அணிந்துகொளபவர்களை பேயும் நோயும் அணுகாது என்பது இவர்கள் கொள்கை

இந்த சந்தடியில் பெண்களை இளைஞர்கள் பிடித்துக்கசக்குவதும் முதலிய கோலங்கள் ஆஸ்திகர்கள் தான் பார்க்கவேண்டும் மற்றும் இதனிடையே அங்கு மலைபோன்று காணப்பட்ட தானியக்குவியல்களை வாரி வாரி அச்சுடுகாட்டில் கண்டபடி இறைக்கின்றனர். ஒரு வேளை உணவும் அகப்படாது பலர் வருந்தும் நம் நாட்டில் அதிலும் செங்கற்பட்டு ஜில்லாவில் இந்துக்களின் ஆஸ்திகமானது தானியக்குவியல்களை சுடுகாட்டை வாரி இறைக்கும்படி கற்றுக்கொடுத்தது போலும். காட்டு மிறுண்டித்தனமான இவ்வறிவற்றதும் இழித்தகைமையானதுமான செய்கைகளை ஒழியுங்கள் என்று இராமசாமிப்பெரியார் சொன்னால் மதம் போயிற்று கடவுள் போயிற்று என்று ஓலமிடுகின்றீர்களே? உங்கள் அறிவுதான் என்னே!

# மதிப்புரை.

மதுரை பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ் வெளியிட்ட புதிய பிரதம கணிதம் முதல் புத்தகம் இரண்டாம்புத்தகம் இரண்டும் வரப்பெற்றோம். சிறவர் சிறுமியர் எளிதில் கற்றுணரும் வண்ணம், படங்கள் மூலமாகவும், கோலிகள், விரல்கள் முதலியவற்றின் எண்ணிக்கை மூலமாகவும், விளங்கவைத்து நல்ல உதாரணங்களோடு நூதன முறையில் வரையப்பட்டிருக்கிறது. இது குழந்தைகளுக்குப் பெரிதும் பயனளிக்கக் கூடியதாயிருக்கும். ஒவ்வொன்றும் விலை அணா ஐந்து.

செம்பூர் வித்வான் திருவாளர் ஆறுமுகஞ் சேர்வை அவர்களால் எழுதப்பட்டு மேற்கண்ட கம்பெனியாராலேயே பிரசுரிக்கப்பட்ட ஆறும் வகுப்பிற்குரிய நவீன தமிழ் வாசகப் புத்தகம் ஒன்றும் வரப் பெற்றோம். இப்புத்தகம் புராணம், இதிகாசம் கட்டுக் கதைகள் முதலியவற்றை ஒருங்கே நீக்கி, தற்கால நிலைக்கேற்ப மாணவர் அறிவு விசாலமடைந்து பெரிதும் பயன்தரக்கூடிய விதமாக வேளாண்மை, குடியின் கெடுதி, சங்கங்கள் சமாசாரப் பத்திரிகைகள் முதலிய வற்றைப் பற்றியும், தலைவர்களது ஜீவிய சரிதங்களோடும் தொகுக்கப்பட்டிருக்கிறது.

கடவுளைப் பற்றியும் முக்தியைப் பற்றியும் சில வரிகளே காணப்பட்ட போதிலும், சிறு குழந்தைகளுக்கு இவை போதிக்கப்படலாகாதென்பதும், அது அடிமை புத்தியை வளர்ப்பதாகுமென்பதுமே நமது அபிப்பிராயம். பகுத்தறிவு வளர, வளர அறிவு வளர்ச்சி பெருகப் பெருக தாங்களாகவே எவ்விஷயத்தையும் ஆராய்ந்து முடிவு செய்து கொள்ள உரிமையுடையவர்களாவர். நவீன முறையில் குருட்டு நம்பிச்சையும் மூட பக்தியும் அறவே அகற்றி இப்புத்தகத்தை எழுதித் தொகுத்த ஆசிரியரைப் பாராட்டுவதோடு இதுபோன்ற அறிவை வளர்க்கக்கூடிய பல புஸ்தகங்களை மதுரை சிதம்பர முதலியார் கம்பெனியார் வெளியிட்டு தமிழ் நாட்டைப் புனிதப் படுத்துவார்களென்று நம்புகிறோம்.இவைபோன்றபுத்தகங்களை ஆதரிக்கவேண்டியது தமிழர்கடமையாகும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ரமாபிமான நிவர்த்திக்காக நிஜ சொரூபமாகிய கடவுளையடைவதற்கு எனக்கு இன்னவர்கள் தான் குருவென்பதை ஐந்து சுலோகத்தால் சொல்லுகிறார். இடமின்மையால் அதன் கருத்தை ஒரு வாக்கியத்தில் சொல்லுகிறேன்.

எவன் சத்தியத்தில் நின்று எல்லாம் தெய்வ சொரூபமென்று தெரிந்து கொள்ளுகிறானோ அவன் பறையனாகவிருந்தாலும் பார்ப்பானாகவிருந்தாலும் அவனே எனக்கு குரு” என்று ஆதிசங்கரர்சொன்னார்.

இது இப்பொழுதிருக்கும் சங்கராச்சாரிகளும் அவர் பக்கமிருக்கும் சாஸ்திரப் பண்டிதர்களும் படித்திருப்பார்கள் என்றாலும் தாங்கள் இன்னொரு தரம் அதை ஞாபக மூட்டுங்கள்.

சாஸ்திரத்தில் இடம் கொடுக்கிற வரையிலும் சிஷியர்களுக்கு சுவதந்திரம் கொடுக்கப்பட வேண்டுமென்று சாமிகள் நினைப்பதாக ஸ்ரீமுகத்தில் காணுவதால் பரமசிவனாலும் ஆதி சங்கராச்சாரியாலும் தர்க்கித்து முடிவு கட்டின சாஸ்திரத்தை விட மேலான சாஸ்திரமுண்டா? இருக்காதே; என்பதைதாங்கள் அவர்களுக்கு ஞாபகமூட்டுங்கள். இதற்கு மேற்பட்ட சாஸ்திரங்களுமிருக்கிறதென்று ஆச்சாரிய சுவாமிகள் பக்கமிருக்கும் சாஸ்திரிகள் சொல்லுவார்களானால் அதைச் சொன்னவர் எந்த பரமேஸ்வரன் எந்த குருவென்பதையும் கேட்டு வாருங்கள்.

அவையனைத்தும் ஞானிகளுக்கும் ஞான காண்டத்திற்குமே யல்லாமல் கர்மகாண்டத்திற்கும் அதிலிருப்பவர்களுக்குமல்லவே என்று பல கால் சொல்லி வந்ததையே இப்போது சொல்லுவார்களானால் இத்தனை நாள் தொடர்ந்து வந்த வர்ணாசிரமக் கொடுமையும் அதனால் விளைந்த அன்னியர் படையெடுப்பும் முதுகெலும்பற்ற புழுக்களாய் சமூகம் துன்புற கர்மமென்றும் ஞானமென்றும் பெயர் வைத்துக் கொண்டு தாங்கள் மாத்திரம் வயிர் வளர்க்கிற மாயா வித்தையை இனி உலகம் தாங்காது என்று சொல்லுவதோடு கர்மத்திலும் எல்லாரும் சமமேயென்பதையும் எடுத்துக் காட்டுங்கள். அரசன் செருப்புகளைப் பழுதுபார்க்க மாட்டான். சக்கிலி அரசாட்சி செய்ய மாட்டான். பார்ப்பான் பறை கொட்ட மாட்டான் பறையன் வேள்வி செய்ய மாட்டான். இவர்களில் உயர்ந்தவன் யார். அவனவன் கருமத்தில் அவனவன் உயர்ந்தவன். ஆதி சங்கரரின் வேதாந்தத்தின் உபதேசமானது யாவருக்கும் சமத்துவம் வேண்டுமென்பதும் ஒருவனுக்குரியது மற்றொருவனுக்கும் உரியது தான் என்பதுமாம். செம்படவனுக்கு சங்கரர் மதமான வேதாந்தத்தைக் கற்பித்தால் அவன் உன்னைப் போல நானும் மனிதனே நான் செம்படவன் நீ தத்துவஞானி அவ்வளவு தானே? மற்றபடி உன்னிலுள்ள அதே கடவுள் நான் என்னிடத்திலுமிருக்கிறார் என்பான். அது ஞானசமக்கும் வேண்டியது. ஒருவருக்கும் அதிகமான உரிமை கூடாது எல்லோருக்கும் சமமாயிருக்கவேண்டும் ஒவ்வொருவரிடமும் தெய்வத்தன்மையிருக்கிறதென்று கற்பிக்கப்பட வேண்டும். அது போலவே தாங்களும் ஒவ்வொருவருக்கும் அதிக உரிமை கூடாது எத்தொழிலும் கர்மததால் சமம் ஒவ்வொருவரிடமும் சுயமரியாதை இருக்க வேண்டும் சுயமரியாதை இல்லாதவனிடம் தெய்வத்தன்மை இருக்காது என்று சொல்லுகிறீர்கள். ஒவ்வொரு மனிதனிடமும் தெய்வத்தன்மை யிருக்கிறது அதை வெளிப்படுத்திக் கொண்டு ஞானத்தையடைய வேண்டுமென்றும் அவை கெட்டுப் போனதினாலே துன்பங்கள்நிறைந்து விட்டன வென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். ஒவ்வொருவனிடமும் சுயமரியாதையாம் பெருமகுணமிருக்கிறது அதை வெளிபபடுத்திக் கொள்ள வேண்டும் அந்த சுயமரியாதைக் குணமில்லாததினாலே எல்லாரும் அடிமைகளாக துன்பமடைகிறோமென்று தாங்கள சொல்லுகிறீர்கள். இவ்விரண்டையும் ஒத்திட்டுப் பார்த்து நமது நாட்டின் பூர்வசரித்திரங்களை ஆதாரமாகக் கொண்டு எல்லாரும் பார்க்கட்டும்.

ஜீவாத்ம லக்ஷணம் பரமாத்ம லக்ஷணம் ஜீவேசுவர சம்பந்த லக்ஷணம் முக்தி லக்ஷணம் என்னும் நித்திய தத்துவங்களான சுருதியென்னும் வேதங்களும் மனு, யாஜ்ஞவல்கியர், பராசர், வதிஷ்டம் முதலிய தரும தத்துவங்களின் ஸ்மிருதிகளும், கிருதயுகத்தில பிர்மாவினால் நூறு கோடி கிரந்தங்களாகச் செய்து வரிசையாகக் குறைந்து இப்பொழுது பிரம்மம், பதுமம் சைவம் வைணவம் பவுஷியம் நாரதீயம் முதலிய பதினெட்டு புராணங்களும் சுவந்திர தந்திரம், பேதகாரிய தந்திரம், சமயாசசார தந்திரம், மாயாதந்திரம் முதலிய பல தந்திர கிரந்தங்களும் வரிசைக்கிரமமாகச் சொன்ன இன்னும் பல நூல்களும் அதன் வியாக்யானங்களும் இவைகளுக்கெல்லாம் அதிபதியான மடங்களும் லோக குருவென்னும் சங்கராச்சாரியுமிருந்தும் ஒரு தீட்டைப் போக்க வழியே இல்லையா என்பதையும் ஒரே குரானை உடைய மகமதிய மதமும் ஒரே பைபிளையுடைய கிருஸ்தவமதமும் சங்கராசாரி அவதரித்த இடமான மலையாளத்தில் பல லக்ஷம் பேர்களின் தீட்டைப் போக்கி மனித உலகத்தில் புகுத்தி விட்ட ஆச்சரியத்தையும் தெரிவித்து வாருங்கள்.

தீட்டு இருப்பதாகச் சொல்லப்படும் ஒரு இந்துவின் கழுத்தில் ஒரு சிலுவையைப் போட்டு அது போட்ட உடனே அவன் தீட்டு போய் விட்டதாகவும் நினைத்து அவனைக் கொண்டு வீட்டு வேலை வாங்கிப் பின் அந்த சிலுவையை எடுத்து விட்டால் மறுபடியும் தீட்டு அவன் மேலே ஏறிக் கொள்ளுகிறது. தீட்டுடையவன் மறுநாள் உயர்ந்த ஜாதிக்காரர்கள் வீட்டிற்கு வந்து அந்த சிலுவையை தன்கழுத்தில் போட்டுக்கொள்ளுகிற வரையிலும் அவன் தீட்டுப் போவதில்லை. போட்ட உடன் தீட்டுப்போய் விடும். அப்படியே தீண்டப்படாதவர்களிடமும் தீட்டில்லாத உயர்ந்த ஜாதிக்கார இந்துக்கள் மலையாளத்தில் பல இடத்தில் வேலைவாங்குவது வழக்கம் அதற்காக இந்துமதஸ்தர்கள் சிலுவையும் வாங்கி வைத்திருப்பார்கள். ஒரு சிலுவை கழுத்தில் போட்டவுடனே போகும் இந்துவின தீட்டு இந்துக்களின் சமயக்குறிகளும், அடையாளங்களும், விசேடக்குறிகளும், மும்மலத்தைப் போக்கும் குறிகளும் முப்பாசங்களை அறுக்கும் குறிகளும், முக்குணங்களை எறிக்கும் குறிகளும், இவைகளையெல்லாம்பெரிதெனப்போற்றும் பிறபந்தக் குறிகளும் சேர்ந்துசங்கராச்சாரியின் சந்நியாசச் சாமுண்டியின் அருளும் சேர்ந்து தீட்டுடையவன் தலையில் போட்டால் அவன் தீட்டைப் போக்காதா? அவன் தீட்டு ஒரு சிலுவையில் போனதாக நினைக்கும் இந்துமதஸ்தன் இத்தனையாலும் அவன் தீட்டுப் போனதாக நினைக்காமலிருப்பதற்குக் காரணமென்னவென்பதையும் ஆச்சாரிய சுவாமிகளிடம் தெரிந்து வாருங்கள்.

கர்ம காண்டத்தில் அவரவர்கள் கடமைகளைச் செய்து நடந்து அதனால் சித்தமானது சுத்தமாகி அகண்டபிரமமாநந்த சாட்சாத்காரம் அடையச் செய்வதே குருபீடத்தின் அனுக்கிரகமென்று ஸ்ரீமுகத்தில் காணப்படுவது உண்மையானால் பார்ப்பார்கள் அவர்கள் கருமமான வேதம் படிப்பதையும் வேள்வி, செய்வதையும் ஆத்ம விசாரத்திலிருப்பதையும் விட்டுவிட்டு பல தொழிலுக்கும் போய் விட்டார்கள். தன்னயத்தை ஒழித்து ஞானமும் அன்பும் பெற்று அவற்றைப் பிறருக்கும் அளிக்க உழைப்பவனே பிராமணனென்று சாஸ்திரம் சொல்லுவது உண்மையானால் அப்பேர்ப்பட்ட பிராமணன் ஒருவரையும் காணோம்! சனாதன தர்மத்தைக் காக்கும் பொருட்டு பிராமணன் பிறந்தானென்பதை மறந்து இங்கிலீஷ் பள்ளியிலும் உத்தியோக ஆசையிலும் பிரவேசித்து உலகசுகபோகங்களுக்கு அலைவதே பார்ப்பானின் கர்மமாகவிருக்கிறது. சனாதன தரும விதியில் சந்நியாசம் அடையும் வயது வந்தும் வக்கீல் வேலையை விடாமலிருக்கும் சனாதன தருமசபைத் தலைவரே அதற்குச் சாட்சி ஆனதால் பார்ப்பார்கள் கர்ம பிரஷ்டர்களாய்விட்டார்கள். சனாதன தரும விதியால் சண்டாளர்களென்று தள்ளப்பட்டவர்களுமாவார்கள். இதனால் சுவாமிகளின் ஆத்மார்த்த உபதேசத்திற்கு அருகதையுடையவர்களுமல்ல. கர்ம பிரஷ்டர்களுக்கு சுவாமிகள் உபதேசம் செய்வதும் சாஸ்திர சம்மதமன்று. தாழ்ந்த ஜாதி யெனப்பட்டவர்கள் அவர்களுக்கு விதித்த விதியிலேயே தங்கள் கருமத்தை இதுகால பரியந்தம் அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது அனுஷ்டித்து வரும்படியாக நிற்பந்தித்தும் வைத்திருக்கிறோம் இவர்களே கர்மததை விடாது நடத்தி வருவதால் இவர்களுக்கே சனாதன தருமத்தில் நம்பிக்கையுமுண்டு ஆனதால் இவர்களே உபதேசத்திற்கு கர்மத்தால் பக்குவமானவர்கள் இவர்களே சுவாமிகளால் உபதேசிக்கத் தகுந்தவர்களுமாவார்கள். அதனால் பலனும் அவர்களுக்குப்பலிக்கும். சுவாமிகளின் குருபீடத்திற்குப பெருமையுமுண்டு. சுவாமிகளைக் காப்பாற்றும் சிஷ்யர்களுமாவார்கள். இச் சத்தியத்தை விட்டு, கர்ம பிரஷ்டர்களுக்கு சுவாமிகள் தவம் செய்யப் போகுமிடமெல்லாம் சோறு போட்டு தெட்சணையும் கொடுப்பது கர்மத்தை ஆதாரமாகக் கொணட குரு ஸ்தானத்திற்கும் சத்தியத்திற்கும் விரோதமாகும் என்பதையும் சாஸ்திர சம்மதமல்ல வென்பதையும் ஆச்சாரி சுவாமிகளுக்குத் தெரியபபடுத்துங்கள் இன்னும் சில விஷயம் மறுவாரம் சொல்லுகிறேன்.

## சீர்திருத்த வாசகசாலையின் அறிக்கை

16-3-30 தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6-மணிக்கு, திருச்சி, பாலக்கரை, பருப்புக்காரத் தெருவில் The Reform Reading Room ஆதரவின் கீழ் உயர். திரு. E. V. ராமசாமி பெரியாரின் படத்திறப்புவிழா கொண்டாடப்படும் அவ்வமயம் திரு. T. V. சோமசுந்தரம் அவர்கள் B. A., B L., தலைமை வகிக்கவும், திரு. K. A. P. விஸ்வநாதம் அவர்கள் படத்தை திறந்து வைக்கவும் அன்புடன் ஒப்பியுள்ளார்கள்யாவரும்விஜயம் செய்ய கோருகிறோம்என்று கா. தைரியம் எழுதுகிறார்.

## மருத்துவர் அபிவிருத்தி சங்கம் முயர்ச்சி

3-3-30 ல் மதுரை சங்க நிலையத்தில் ஏ. ராமசாமி பண்டிதர் தலைமையில் ஓர் கூட்டம் கூடிற்று அதில் திரு.பழனியப்பன் அவர்கள் முயர்ச்சி என்பதுபற்றி பேசினார், திரு,யன்சுருளி முதலியபலர் அதை ஆதரித்துபேசினார்கள். தலைவர் முடிவுரையில் மக்கள் வெளி நாட்டுக்கு போய் வந்தால் தான் முயர்ச்சியின்பெருமை அறிந்து அதில் ஈடுபட முடியும் என்று பேசினார் என்றுகாரியதரிசி எழுதுகிறார்.

## தேனூர்

மதுரை ஜில்லா தேனூரில் திரு. கே, முத்துநாயகம் அவர்கள் பெரிய தாயாகிய திருமதி பருவதத்தம்மாவின் இறுதிச் சடங்காக பார்ப்பனரன்னியில் நடத்தியதுடன் திரு. அ, மொ. ராமய பிள்ளை அவர்களால் ஆரிய சூட்சி என்பதாக ஒரு உபன்யாசம் செய்து பிறகு சமபந்தி போசனம் நடந்தது,

# குமரன் பிரைஸ் சீட்டு.

## குமரன் சந்தாதாருக்கு 500 ரூபாய் இனாம்

—0—

நாளிது தை 10 உ முதல் பங்குனி 30 உ வரை சேரும் புதிய சந்தாதாருக்கு மட்டும்

—0—

குறிப்பிட்ட தேதிக்குள் 500 சந்தாதாருககுக் குறையாமல் சேரக் கூடுமென் றெதிர்பார்க்கப் படுகிறது. இந்த ஐநூறு சந்தாதாரிடம் வரு லாகும் தொகையிலிருந்து எடுக்கப்படும் 500 ரூபாவுக்குப் பின்வருமாறு பிரைஸ் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| முதல் | பிரைஸ் | ரூ. | 100 |
| இரண்டாவது | ,, | ,, | 50 |
| மூன்றாவது | ,, | ,, | 25 |
| நான்காவது | ,, | ,, | 15 |
| ஐந்தாவது | ,, | ,, | 10 |
| 6 முதல் 65-வரை ரூ. 5 வீதம் சீட்டு 60. | | ,, | 300 |

நிபந்தனைகள்.

1. சுக்ல-ஸ்ரீ பங்குனி-மீ 30-உக்குள் ஆபீசுக்குப் பணம் வந்து சேரவேண்டும்.

2. சுக்ல-ஸ்ரீ தை-மீ 10-உ யிலிருந்து மேற்படி ஸ்ரீ பங்குனி 30-உ வரை முன்பணம் செலுத்திச் சேரும் வாரப் பதிப்பு ஜீவிய சந்தா தார்களும், மேற்படி பதிப்பு சாதாரண சந்தாதார்களும் சீட்டிற் சேர்க்கப் பெறுவர். சாதாரண சந்தாதார் ஒரு வருஷ சந்தாவுக்குக் குறையச் செலுத்தினல் சேர்த்துக் கொள்ளப் பெறமாட்டார்.

3. வி. பி. மூலம் சேரும் சந்தாதாரும் ஏற்கனவே இருந்துவரும் சந்தாதார்களும் இதிற் சேர்க்கப் பெற மாட்டார்கள்.

4. பிரமோதூத-ஸ்ரீ சித்திரை-மீ 1-உ குமரனபீசில் ஐந்து பிர முகர்கள் முன்னிலையில் சீட்டுகள் குலுக்கி யெடுக்கப்படும்.

5. பிரைஸ் தொகையை நேரிலும் பெற்றுக்கொள்ளலாம். இல் லாவிட்டால் அவரவருக்கு மணியார்டர் கமிஷனை கழித்தும் பாக்கி நே ரே அனுப்பிவிடப்படும்.

6. இந்த ஐந்து பேரிருந்து செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.

7. பிரைஸ் கிடைத்தவர்கட்கும் மற்றவர்கட்கும் வழக்கம்போல் பத்திரிகை அனுப்பப்படும்.

8. புதிதாகச சேரும் சந்தாதார் தொகை 500-க்கு மேற்பட்டால் சந்தா ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் சேர்த்து பிரைசில் பணவு அதிகப் படுத்தப்படும். குறைந்தாலும் அப்படியே பிரைசில் பணவு குறைக்கப் படும். எப்படியாலும் குறிப்பிட்ட 65-பேருக்குச் சீட்டு விழுதல் கூடும்.

8. பிரைஸ் பெற்றவர் விவரம் சித்திரை மாத முதல் வாரக் குமர னில் வெளியிடப்பெறும்.

மானேஜிங் டைரக்டர்,
தனவைசியன் கம்பேனி லிமிடெட்,
காரைக்குடி.

## குமரன் வாரப் பதிப்பு சந்தா.

| | | |
|---|---|---|
| உள் நாட்டுக்கு | ரூ. | 5—0—0 |
| வெளி நாட்டுக்கு | ,, | 6—0—0 |
| ஜீவிய சந்தா | ,, | 100—0—0 |

# குமரன் டைரி.

## (பிரமோதூத வருடம்)

விலை ரூபா ஒன்று

மானேஜர்,
தனவைசியன் கம்பேனி லிமிடெட்,
காரைக்குடி, (இராமநாதபுரம் ஜில்லா)

## குடி அரசு புத்தகாலயம்.

| | | |
|---|---|---|
| மேயோ கூற்று மெய்யா பொய்யா | | 0—4—0 |
| ஞானசூரியன் | ... | 0—4—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | | 0—4—0 |
| மனு நீதி மருமம் | ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | . | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. | | 0—2—0 |
| சோதிடப் புரட்டு. | ... | 0—2—0 |
| திருகுறள் | ... | 0—8—0 |
| திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டு சொற்பொழிவு | ... | 0—2—0 |

8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப் பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன்



அநுபோகப்பயிற்சிமுறையும்
விலை ரூபா 1—8—0
(தபால் சார்ஜ் வேறு)
வெளிநாட்டு ஆர்டர்களுக்கு
முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற் றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை

இனாம்! முற்றிலும் இனாம்!!

## காசியில் மூன்று நாள் என்ற ஓர் இனிமையான புத்தகம்

### வெளிவந்துவிட்டது

உடனே ஒரு அணா தபால் ஸ்டாம்புடன் தங்கள் முழு விலாசங் களை தெளிவாய் எழுதி அனுப்புங்கள். அடுத்த தபாலில் மேற்படி புத்த கம் தங்களுக்கு இனாமாக வந்து சேரும்.

கே. எஸ். முத்தையா அண்டு சன்ஸ்,
சில்க் ஹவுஸ், மதுரை.

## முன்னேற்றம்.

இஃது சுயமரியாதைக் கொள்கையை ஆயு தமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்தி ரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4—0—0 அல்லது
டா. 2—25

விலாசம்:— மானேஜர்,
"முன்னேற்றம்"
எப்] 155, சிலிசிரோட், சிங்கப்பூர்.

## மேயோ கூற்று

மெய்யா—பொய்யா?

விலை அணா 4.

சி. எ. அய்யாமுத்து.
புஞ்சைப் புளியம்பட்டி,
கோயமுத்தூர் ஜில்லா.

குணம் இல்லையாயின் பணம் வாபீஸ்.

தேகாரோக்கியம்.

# வைரத்திற்கு மேலானது!

## நாராயண சஞ்சீவி லேகியமும்

### அயததங்க செந்தூரமும்

இரத்தத்தை சுத்தி செய்து, நரம்புகளை முறுக்கேற்றி, தேக அழலையைப் போக்கி, சீதோஷ்ணத்தை சமனப்படுத்தி, ஆரோக்கியத்தையும் தாது விர்த்தியையும் உண்டாக்கி, சிற்றின்பத்தில் மிக மகிழ்ச்சியைத் தரும். துர் அப்பியாசத்தினுல் உண்டாகும் பலஹீனத்தைப்போக்கி அபாரமான ஞாபக சக்தியை உண்டாக்கும். 20-வகை மேகரோகங்களையும் போக்கடிக்கும்.

24-நாள் லேகியமும் அயத்தங்க செந்தூரம் புட்டி 1-ம் ரூ. 2—4—0
48-நாள் „ „ „ „ 2-ம் ரூ. 4—4—0

நாராயண சஞ்சீவித் தைலம்,—பச்சிலை மூலிகைகளாலும் பசும் பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டன. தேக வரட்சியைப் போக்கி, மூளையைக் குளிரச் செய்து புத்திக் கூர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25 வருட காலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள் வாடிக்கையாய்வாங்கிஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தைதோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5 பல டின் 1-க்கு விலை ரூ. 1—0—0

நாராயண திராட்சைப் பழ லேகியம்:—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனுல் நமது நாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவலதைப்பட்டு அதை சரியாய் கவனிக்காமையினுல் அநேக வித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கேச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்துக்கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாயிருக்கும்.

டப்பி 1-க்கு விலை ரூ. 1—0—0

எல்லாவற்றிற்கும் தபால் செலவு வேறு. வெளிநாட்டன்பர்கள் தபால் செலவு சேர்த்து முன்பணமாக அனுப்பவேண்டும்.

ஸ்ரீ நாராயண மேடிகல் ஹால், காஞ்சீபுரம்.

# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர்: டோராப் ஜே டாட்டா. Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற „ | ... ரூ. | 3,56,05,275, |
| வசூலான „ | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜுன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:

"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு"

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

நிமிஷக்கணக்கில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!

# சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினுல் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

தபால் கூலி அணு. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0
6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.
F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மேடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

# தமிழரசு.

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

(சித்திர வர்ணப்படங்களுடன்)

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விவரிக்கும்; வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக்காட்டித்தெரிவிக்கும். இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

மாதிரி பிரதி இனும்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | உள்நாடு | ரூ. | 3—0—0 |
| | வெளிநாடு | ரூ. | 4—0—0 |

ஆசிரியர்:—மணி திருநாவுக்கரசு முதலியார்.
உபபத்திராதிபர்:—திரிசிரபுரம் நடராஜன்.

தமிழரசு காரிய நிலயம்,
31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

கடவுள் கடவுளென காசைத் தொலைக்காதே

"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.